www.tamilrangam.net

Raya



# தேடல்

OPAL

② THEDAL 1989 மாசி

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilrangam.net

## எமது தேடலில்

# ஒரு தொலைநோக்குணர்வுடன் செயற்படுவோம்

இலங்கையில் பெயரளவிலேனும் ஜனநாயகம் நிலவுகின்றதுதான் என்பதைப் பன்னிரண்டு ஆண்டுகளின்பின் பாராளுமன்றத்து தேர்தலை நடத்திக்காட்டியதன் மூலம் நிரூபிக்க முயன்றிருக்கிறார்கள்.

இனப்பிரச்சனை, இந்தியாவுடனான ஒப்பந்தம் இந்திய இராணுவத்தின்வருகை, தென்னிலங்கைத்தீவிரவாதக் குழுக்களின் தொடரும் உயிர்பறிப்பு நடவடிக்கைகள், அதிகரித்துப்போன அன்னியக்கடன், பொருளாதார நெருக்கடிகள் போன்ற இன்னும் பல உந்தித்தள்ள இன்னும்தள்ளிப் போடமுடியாதவாறு தேர்தலும்தவிர்க்க முடியாததாகிப் போனது இலங்கை இனவாத அரசுக்கு.

ஆனாலும் இம்முறை இத்தேர்தல் பலமாறுதல்களை புறத்தோற்றத்திலாவது உள்ளடக்கியதால் முக்கியத்துவம் வாய்ந்ததாகிப்போகிறது. தேர்தல் முடிவுகள் தென்இலங்கையில் அதிகளவு மாறுதல்களை அல்லதுபாதிப்புகளை நிகழ்த்தாதுவிடினும் வடக்கு கிழக்கில் அப்படியல்லபோராடிய புதிய தலைமுறைக்குத் தமிழ்மக்கள் தங்கள் அங்கீகாரத்தை அளித்திருக்கிறார்கள். வாக்களித்த மக்கள் தொகையைவைத்துப் பார்க்கும்போது தமிழ்மக்கள் ஓர் அமைதியான சூழலின் அவசியப்பாட்டை புலப்படுத்திருக்கிறார்களென்றே எண்ணத் தோன்றுகிறது. எத்தனையோ வருடங்களுக்குப் போராட்டம் பின்தள்ளப்பட்டுப் போன இன்றைய நிலையில் அர்த்தமற்ற இழப்புக்களைத் தாங்க தங்களுக்குச் சம்மதமில்லை என்பதைஉணர்த்தியிருக்கிறார்கள் எனவும் எடுத்துக்கொள்ளலாம். எப்படியோ, வடக்கு கிழக்குஒரு வரையறுத்த வடிவத்துக்குள் வந்துதனது



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilrangam.net

புதிய பிரதிநிதிகளைப் பாராளுமன்றத்திலும் பிரதிநிதித்துவப்படுத்தியிருக்கிறது.

இத்தனை இழப்புக்களுக்கும், தியாகங்களுக்கும் இது ஒன்றும் ஒட்டுமொத்தமான தீர்வல்ல பரிகாரமல்ல.

ஒரு சூழ்நிலை மாற்றம். அவ்வளவுதான் ஆகவே பிரச்சனை தீர்ந்துவிடவில்லை, அப்படியொரு தோற்றம் உருவாக்கப்பட்டிருக்கிறது. இதிலே உழைக்கும் மக்களுக்கு, இதர பரந்துபட்டமக்களுக்குஎன்ன நன்மை? சாதி, சமயம், சீதனம், பெண்ணடிமைத்தனம், இன்னும் சமுதாய ஏற்றத்தாழ்வுகள், வர்க்கநிலைப்பாடு அனைத்தும் அப்படி அப்படியே இருக்கஅடிப்படை மாற்றத்தைக் கனவுகண்டதோடு சரி, தவிர அபிவிருத்தி சீர்திருத்தம் என்று புதிதாக எதையாவது எதிர்பார்க்கலாம். அதற்கு மேல் சாத்தியமில்லை என்பதை விளக்க வேண்டிய அவசியமில்லை.

அடிப்படைமாற்றமென்பதை வெறுமனே சமரசத் தீர்வுகளுக்கூடாகவோ, அல்லது பாராளுமன்றத் தேர்தல் வடிவங்களுக்கூடாகவோ கற்பனை பண்ணிக்கூடப் பார்க்க முடியாது. அது போராட்டத்தின் மூலமாகவே சாத்தியமாகும். அதுவும் வர்க்கப்போராட்டமாக, உழைக்கும் மக்களின் தலைமைத்துவத்தில் நடத்தப்படும் போராட்டமாக அது அமைதல் வேண்டும். முதலாளித்துவ குட்டி முதலாளித்துவ வர்க்க நலன் சார்ந்தபோராட்ட முன்னெடுப்புத்தான் அதற்கேயுரிய தனித்துவமானஊசலாட்டத்தன்மையில் தவிர்க்க முடியாதவாறு இன்றைய வடிவத்தைப் பெற்றிருக்கிறது. இதிலிருந்து பல விடயங்களைக் கற்றுக்கொள்ளவேண்டும். இனியாவது, மார்தட்டி வீரம்பேசிய எமது மறத்தமிழர் பெருமைகளை நிறுத்தி, போராட்டம் என்றால் என்ன, அது எத்தகைய தன்மையைக்கொண்டிருக்க வேண்டும், எந்த மக்களின் நலன் சார்ந்து, எந்தமக்களின் தலைமையில் நடத்தப்படவேண்டும் என்பதில் ஒரு தெளிவினைப் பெற்றுக்கொள்வதோடு, இதுசார்ந்த எதிர்கால நடவடிக்கைகளுக்கான சூழலை உருவாக்குவதற்குரிய ஒரு

தொலை நோக்குணர்வுடன் செயற்படுவோம்

www.tamilrangam.net

# ஈழத்தில்...... ட்ரொட்ஸ்கிய அபாயம்

— எஸ். இளங்கோவன் — (சென்ற இதழ் தொடர்ச்சி)

இது என்ன கொடுமை! தெரியாத பாதையில் புரியாத பயணமா? மார்க்ஸியத்தின் அடிப்படையில் நிற்காத ஒரு தத்துவம் (ரொட்ஸ்கியம்) "தானே" மார்க்ஸியத்தின் சரியான கிளையென்று உரிமை கோருவதா ?

நமது ரொட்ஸ்கியவாதிகள், மார்க்ஸியத்தின் சரியான கிளை ரொட்ஸ்கியம் தான் எனக் கோருவதன் மூலம் "வாழைப்பழத்தில் ஊசி ஏற்றுவது போல்" லெனினிசத்தை மறுத்துக் கொண்டிருக்கிறார்கள். மறுபுறம் ரொட்ஸ்கியிடம் இல்லாத கருத்துக்கு லெனினிடம் ஓடிப்போய் லெனினையும், ரொட்ஸ்கியையும் ஒன்றாகக் கொண்டு வந்து நிறுத்துகின்றார்கள்.

ரொட்ஸ்கிய வாதிகளே! நீங்கள் மொட்டந்தலைக்கும், முழங்காலுக்கும் முடிச்சுப் போடாதீர்கள். எல்லாவற்றையும் போலவே ரொட்ஸ்கியத்திற்கும் ஒரு ஊற்று உண்டு. அந்த ஊற்று, ஜேர்மன் சமூக ஜனநாயகவாதியான "பார்வஸ்" என்பவரின் "நிரந்தரப்புரட்சி" குறித்த கருத்துக்கள் ஆகும். இவற்றைத்தான் அடிப்படையாகக் கொண்டு ரொட்ஸ்கி 1905 இற்கும் 1906 இற்கும் இடையில் "நிரந்தரப்புரட்சி" என்னும் தனது மிகப்பிரதான நூலை உருவாக்கினார் என வாசகர்கள் அறிவீர்களாக! இதை ரொட்ஸ்கி தனது "எனது வாழ்க்கை" எனும் நூலில் ஒப்புக் கொள்கின்றார். தான் மார்க்ஸினை அடியாகக் கொள்ளவில்லை என்றும் ஒப்புக்கொள்கின்றார். எனவே இவைகள் குறித்த விவாதங்களுக்கு முன், சென்ற இதழில்கூறியதுபோல ரொட்ஸ்கியத்தின் சாரம்சம் குறித்துப் பார்த்துவிட்டு செல்வோம்.

ரொட்ஸ்கியத்தின் சாரம்சம் என்று இரண்டு, மூன்று வரிகளில் கூறிவிட்டுச் செல்வோமாயின், ரொட்ஸ்கிய வாதிகள் மிகச் சினங்கொண்டு விடக்கூடும். ஆதலால், அந்த சாரம்சத்தை எமது ஆய்வுக்குரிய (தகர்க்கப்பட வேண்டிய) முன்னுரை வடிவில் கொள்வோம்.

அது வருமாறு :-

> தனியொரு நாட்டில் சோசலிசத்தைக் கட்டமுடியாது. அதாவது தனியொரு நாட்டில் ஏகாதிபத்தியப்பிடியின் சங்கிலிக்கணுவை உடைப்பது சாத்தியமேயல்ல. அதற்குப்பதிலாக சர்வதேசரீதியில் பல நாடுகளில் சோசலிசப்புரட்சிகள் ஒருமித்து நடைபெறவேண்டும். இந்தப்புரட்சிகளின் கதாநாயகன் பாட்டாளிவர்க்கம் மட்டுமேயாகும்.
> இத்தகைய உலகப்புரட்சியை முன்னெடுப்பதற்குரிய-



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilrangam.net

உலகக்கட்சி "நான்காம் அகிலம்" ஆகும். நான்காம் அகிலத்தை நிறுவியவரும் ரொட்ஸ்கிதான் என்பதை வாசகர்கள் கவனத்தில் கொள்ளவும்.

இதன்படி உலகப்புரட்சியை முன்னெடுப்பதற்கான உலகக்கட்சி "நான்காம் அகிலம்" ஒன்றுமட்டுமே இருக்க வேண்டும். ஆதலால் ஒவ்வொரு நாட்டிலும் சோசலிசப்புரட்சிக்கும், சோசலிசக் கட்டுமானத்திற்குமான தனித்த கட்சிகள் (கம்யூனிஸ்ட் கட்சிகள்) அழிக்கப்பட வேண்டும்.

இவற்றுடன்...

(1) சோசலிச நாடுகளை அவதூறு செய்தல்.

(2) யுத்தம் புரட்சியின் தாயாக இருக்கின்றதென்றும் அவை எந்த வடிவில் இருந்தாலும், (குறிப்பாக-உலகயுத்தம்) அவற்றை உற்சாகத்துடன் வரவேற்றல்.

(3) தொழிற்சங்கத்தை அரசியலுக்குள் இழுத்துஆயுதம் ஏந்தப்பண்ணல். அதாவது, அதன் சட்டரீதியான - வரையறைகளுக்குள் இருந்து வெளியில் வந்து தலைமறைவு இயக்கமாகச் செய்தல்.

(4) விவசாயிகளை புரட்சிகர சக்தியாக கணிக்காமை.

(5) பரந்து பட்ட பொதுமக்களின் (குட்டிப்பூர்சுவா - வர்க்கம்) பங்களிப்பைப் பற்றி எள்ளளவும்நினைக்காத தன்மை.

(6) தேசிய விடுதலையை வரலாற்று முன்நோக்கலுக்கான மிகப்பிரதான காரணிகளில் ஒன்றாகக் - கொள்ளாத தன்மை.

(7) கொரில்லாப்போராட்டத்தையே மிகப்பிரதான கண்ணியாகக் கொள்ளல். அதிலும் அவற்றை நட-மாடும் கொரில்லா அணிகளாக இயக்கத்தில் நிறுத்தல்.

(8) இன்னும் பிற.....

இவையும் இன்னபிறவும் ரொட்ஸ்கியம் தோன்றுகின்றபோதே (அதாவது ரொட்ஸ்கி வாழ்ந்த காலத்திலேயே) அதன் அடிப்படைகளாக இருந்தவை. பின்னர் 1960 களிலிருந்து நான்காம் அகிலத்தினர் ரொட்ஸ்கியத்தில் எத்தகைய - மாற்றங்களைக் கொண்டு வந்தனர் என பின்னர் சுட்டிக் காட்டுகின்றேன்."

இப்பொழுது விவாதத்திற்குள் நுழைவோம்-

"விடிய விடிய இராமர்கதை விடிந்த பின்னர் இராமருக்கு சீதை என்ன முறை? என்பது போல் இருக்கின்றது ரொட்ஸ்கியவாதிகளின் விவாதம். தனியொரு நாட்டில் சோசலிசத்தைக் கட்டுவது சாத்தியமல்லவென மார்க்-ஸோ, எங்கெல்ஸோ கனவிலும் நினைக்கவில்லை. மார்க்ஸியம் தோன்றியநாள் முதல் அதன்ஆய்வுகள் அனைத்தும், தனியொரு நாட்டில் சோசலிசம் பற்றிய இலட்சியத்தின் ஆய்வுகள் ஆகும். எனவே ரொட்ஸ்கியவாதிகளுக்கு அவர்களின் சிந்தனைக்குழப்பத்திற்கு மார்க்ஸியத்தின் அரிச்சுவடியாக விளங்கும் -



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilrangam.net

"கம்யூனிஸ்ட் கட்சி அறிக்கையை" அவர்களுடைய சிந்தனைத் தெளிவிற்குசற்று விளக்கிக் கூறுவோம்.
1848 இல் லண்டனில் வெளியிடப்பட்ட கம்யூனிஸ்ட் கட்சி அறிக்கை லெனின் எழுதியது போல மாமேதைக்குரிய தொலைவோடும் ஒளிச்சுடரோடும் இன்றும் விளங்குகின்றது. மார்க்ஸியத்தின் வளர்ச்சிஅல்லது தொடர்ச்சி என்ற ஒன்று மார்க்ஸியத்தை வளர்ப்பதாகத்தான் இருக்க வேண்டுமே தவிர திரிப்பதாக இருக்கக்கூடாது.

கம்யூனிஸ்ட் கட்சி அறிக்கையில் 1872 இல் புதிதாகச் சேர்க்கப் பட்ட விடயம், 1871 இன் "பாரிஸ் கம்யூன்" அனுபவமாகும். இந்தச் சேர்க்கப் பட்ட விடயமானது, அறிக்கையை மேலும் வளம்படுத்தியதே தவிர அறிக்கையைத் திருத்தவில்லை. இதை லெனின் தனது "அரசும் புரட்சியும்" எனும் நூலில் விபரமாக விளக்குகின்றார்.
பாரிஸ் கம்யூன் அனுபவம் வருமாறு :-
"ஏற்கனவே பூர்த்தியான தயார்நிலையிலுள்ள அரசுப்பொறியமைத் தொழிலாளி வர்க்கம் அப்படியே கைப்பற்றித் தனது சொந்த காரியங்களுக்காக பயன்படுத்த முடியாது. "
பாரிஸ் கம்யூன் தோல்வியிலிருந்து, அவர்கள் வந்த மிகமுக்கியமான முடிவு மேற்படி முடிவுக்கே தவிர, மாறுக சர்வதேச ரீதியில் சோசலிசப்புரட்சிகள் நடக்காமல் தனியொரு நாட்டில் சோசலிசத்தைக் கட்டமுடியாது - என்ற ரொட்ஸ்கியவாதிகளின் முடிவுக்கல்ல.

மேற்படி பாரிஸ் கம்யூன் முடிவை, தமது வெளியீடுகளில் ரொட்ஸ்கியவாதிகளும் பயன்படுத்தத் தவறுவதில்லை. மேற்படி முடிவானது தனியொரு நாட்டில் சோசலிசத்தின் சாத்தியம் பாற்பட்ட முடிவாகும். ரொட்ஸ்கியவாதிகளால் பாரிஸ் கம்யூன் முடிவு பயன்படுத்தப்படுகின்ற அதேவேளையில் தனியொரு நாட்டில் சோசலிசத்தின் சாத்தியமின்மை குறித்த திட்டவட்டமான தெளிவான வரையறைகளை ரொட்ஸ்கியவாதிகள் என்றும் முன் வைத்தது கிடையாது.

ரொட்ஸ்கியவாதிகள் கூறுவதெல்லாம் இது தான்; அதாவது மார்க்ஸ் - எங்கல்ஸ் உயிருடன் இருக்கும் பொழுது உலகமுதலாளித்துவத்தின் ஏகாதிபத்திய கட்டம் தொடங்கவில்லை-, ஏகாதிபத்தியத்தால் உலகம் முதலாளித்துவமாக்கப்பட்டபின்னே - தனியொரு நாட்டில் சோசலிசப்புரட்சியும்-கட்டுமானமும் சாத்தியமற்றுப் போய்விட்டது என்கிறார்கள் அவர்கள்.

மார்க்ஸ், எங்கெல்ஸ் உயிருடன் இருந்த பொழுது உலகமுதலாளித்துவத்தின் - ஏகாதிபத்திய சகாப்தம் தொடங்கவில்லையென்பது உண்மை தான். அது பற்றி லெனின் கீழே இவ்வாறு எழுதுகின்றார்.

உலகமுதலாளித்துவத்தின் ஏகாதிபத்திய சகாப்தம் தொடங்கிய காலத்தில் மார்க்ஸோ, எங்கெல்ஸோ உயிருடன் இருக்கவில்லை. இச்சகாப்தம் - 1898-1900 க்கு முன்னதாக ஆரம்பமாகவில்லை. ஆனால் இங்கிலாந்தின் விசேடம் என்னவெனில், 19 ஆம் நூற்றாண்டின் நடுப்பகுதியிலேயே அது குறைந்த பட்சம் ஏகாதிபத்தியத்துக்குரிய இரண்டு முக்கிய தனிஇயல்புகளை -



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilrangam.net

வெளிப்படுத்தி வந்தது.

(1) மிகவும் பரவலான காலனிகள்

(2) ஏகபோக லாபம்(உலக சந்தையில் அதற்கிருந்த ஏகபோக -நிலை)

( பார்க்க லெனின்: ஏகாதிபத்தியமும் சோசலிசத்தில் பிளவும் )

உலகமெல்லாம் ஏகாதிபத்திய சங்கிலியால் பிணைக்கப்படும் ஒரு காலம் வரும் என்பது மார்க்ஸுக்கும், எங்கெல்சுக்கும் புரியாத ஒரு புதிர் அல்ல.

இந்தச்சங்கிலியின் பெரும்பகுதியை தமதாக்கிக் கொள்வதற்கு நாடுகள் சண்டையிடும் என்பதும் அவர்கள் புரிந்து கொண்ட ஒன்று தான். ஆனால் அவர்களை அப்படியானதொரு ஊகதிருஷ்டிக் கண்ணோட்ட ஆய்வைச்செய்வதற்கு அவர்களின் (மார்க்ஸ்-எங்கெல்ஸ்) வாழ்நாளின் இறுதியில் இருந்த இங்கிலாந்துத் தொழிலாளிவர்க்கக் கட்சிகளில் குடிகொண்ட சந்தர்ப்பவாதம் இடங்கொடுக்கவில்லை. அதாவது இங்கிலாந்தில் பிரபுக்குல தொழிலாளிவர்க்கம் உருவாக்கப்பட்டுக் கொண்டிருந்த காலத்தில் அந்தப்பிரபுக்குல தொழிலாளிவர்க்கத்தை தலை - முழுகப்பண்ணுவதிலேயே அவர்கள் தமது வாழ்நாளின் இறுதியைச் செலவிட் - டனர்.

இருந்தும் "கம்யூனிஸ்ட் கட்சி அறிக்கைக்கு " 1882 ஆம் ஆண்டு மார்க்ஸ்-எங்கெல்சால் எழுதப்பட்ட 1890 ஆம் ஆண்டு ஜேர்மன் பதிப்பில் இடம் பெற்ற முகவுரையில், ஐரோப்பாவிலிருந்து அமெரிக்க ஐக்கிய நாட்டில் குடியேறிய உபரிப்பட்டாளி அணிகளை குறித்து குறிப்பிடுகையில் பின்வருமாறு எழுதுகின்றார்கள்.

"நிலைமை இன்று எப்படி மாறிவிட்டது! ஐரோப்பாவிலிருந்து நடைபெற்ற இந்தக் குடியேற்றம் தான் வடஅமெரிக்காவை பிரம்மாண்ட அளவிலான விவசாயப் பொருளுற்பத்திக்கு தயார்செய்தது. இப்பொழுது இந்த அமெரிக்க விவசாயப் பொருளுற்பத்தியின் போட்டி ஐரோப்பாவின் சிறிதும் பெரிதுமான நிலவுடமைகளது அடித்தளங்களேயே ஆட்டிக்குலுக்குகின்றது. அத்தோடு இந்தக் குடியேற்றம் இதுகாறும் மேற்கு ஐரோப்பாவும் முக்கியமாம் இங்கிலாந்தும் தொழிற்துறையில் வகித்து வரும் ஏகபோகநிலை சீக்கிரமே தகர்க்கப்படும் என கூறும்படி அத்தனை வீறுவிறுப்போடும் அவ்வளவு பெரியளவிலும் அமெரிக்க ஐக்கிய நாடு தனது அளவிலாத்தொழிற்துறைச் செல்வாதாரங்களைபயன் படுத்திக் கொள்வதைச் சாத்தியமாக்கிற்று......

(கம்யூனிஸ்ட் கட்சி அறிக்கை- பக்கம் 25 )

(தொடரும்)



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilrangam.net

'உன் அறைகூவலை யாருமே
கேட்காத போதும்,
உறுதியுடன் தனிமையில் மேலே
நடந்து செல்; பயத்திலே
சுவரைப் பார்த்து மற்றவர்
குமைந்து நிற்கையில்,
ஓ! துரதிர்ஷ்டப் பிறவியே!
உன் மனம் திறந்து வெளியே
தனிமையில் நீயே பேசிக் கொள்;
வனாந்திரவெளியை நீ கடக்கும்
பொழுது, மற்றவர் உன்னைத்
தனியே விட்டுப் போனால்,
ஓ! துரதிர்ஷ்டப் பிறவியே!
முட்களின் மீது ரத்தக்கறை
படிந்த பாதையில்
உறுதியாக நடந்து செல்—
தனிமையில் நடந்து செல்!
புயல் சூழ்ந்த பயங்கர இரவில்
வழிகாட்டும் ஒளியை
மற்றவர் உனக்கு உயர்த்தத்
துணியாதபோது,
ஓ! துரதிர்ஷ்டப் பிறவியே!
அடிக்கும் மின்னலிலும் மழையின்
அவதியிலும் உன் இதயத்தையே
நீ விளக்காக ஏற்றிக் கொள்—
நீயே உனக்கு வழிகாட்டும்
ஒளியாக விளங்கிக் கொள்!'

— இரவீந்திர நாத் தாகூர் —



# உறுதியுடன் நடந்து செல்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilrangam.net

# பூகோளத்தின் மேற்பரப்பில்

## ஆப்கானிலிருந்து சோவியத்துருப்புக்கள் வெளியேற்றம்

பெப்ரவரி 15 ந்திகதி காலை11.55 மணிக்கு ஆப்கானிலிருந்து சோவியத்படைகளின் கமாண்டர் ஜெனரல்போரிஸ் குரோமோவ் கடைசிவீரராகஅங்கிருந்து வெளியேறினார். கடந்தவருடம் ஏப்பிரலில் ஜெனீவாவில்கூடிய சோவியத், பாகிஸ்தானிய, அமரிக்க இராஜதந்திரிகள் பின்வரும் உடன்படிக்கையில் கைச்சாத்திட்டனர். அதாவது சோவியத் 10 மாதங்களில் தனது முழு இராணுவத்தையும் வாபஸ் வாங்குவது, பாகிஸ்தான் தனது நாட்டிலுள்ள ஆப்கான் எதிர்ப்புரட்சியாளர்களை வெளியேறச் சொல்வது, அமரிக்கா இவர்களுக்கு ஆயுதம் வழங்குவதை நிறுத்துவது என்பதாகும். சோவியத் தான்கூறியபடி பெப்ரவரி 15 இற்குள் தனது முழு இராணுவத்தையும் திருப்பி அழைத்துவிட்டது. ஆனால் பாகிஸ்தான் இன்னும் ஒன்றும்செய்யவில்லை, புதிதாக தெரிவு செய்யப்பட்ட அமரிக்கஜனாதிபதி ஜோர்ஜ்புஷ், அமரிக்கா தொடர்ந்தும் ஆப்கான் எதிர்ப்புரட்சியாளர்களுக்கு ஆயுத உதவிகளை வழங்கும் என அறிவித்துள்ளார். ஆப்கானிஸ்தானில் 1973 ம் ஆண்டுவரைஆட்சி புரிந்த மன்னன் ஸாகிர்ஸாவை அவரது மைத்துனன்நாட்டை விட்டு கலைத்துவிட்டு ஆட்சியைக் கைப்பற்றினான். 1978 ஏப்ரலில் இந்த ஆட்சியை அங்கிருந்த இடது சாரிக்குழு கைப்பற்றியது. இடது சாரிக்குழு ஆட்சியை மதவாதிகளின் முகைதின் குழுவும் அமரிக்காவும் மேற்குலக நாடுகளும் எதிர்த்தன. அமரிக்காவினதும், மேற்குலக நாடுகளினதும் ஆயுத, பண உதவி பாகிஸ்தானூடாக எதிர்ப்புரட்சியாளர்களுக்கு வழங்கப்பட்டது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilrangam.net

1979 டிசம்பர் 27 இல் ஜனாதிபதி பார்பராக்கமாலின் அரைப் பாதுகாக்கவென அப்போதைய சோவியத் ஜனாதிபதி பிரஸ்னேவால் 80 ஆயிரம் துருப்புக்கள் ஆப்கானிஸ்தானுக்குள் அனுப்பப்பட்டன.

சரியாக 9 வருடங்கள் 50 நாட்களின்பின் சோவியத் செஞ்சேனை திருப்பி அழைக்கப்பட்டது. 15 ஆயிரம் வீரர்கள் கொல்லப்பட்டதுடன் பலர் காயமடைந்துள்ளனர். ஈரானிலும், பாகிஸ்தானிலும் பின்தளத்தைக் கொண்ட முஜைதீன் குழுக்கள், ஆப்கானில் மத ஆட்சி நிலவ வேண்டுமென்பதான கொள்கையுடையவர்கள். சென்றவாரம் பாகிஸ்தானில் கூடிய இக்குழுக்களின் தலைவர்கள் ஒரு முடிவான தீர்மானங்கள் எடுக்காமலே கலைந்தனர். இவர்களில் பாகிஸ்தானிய முஜைதீன்களா, ஈரானியமுஜைதீன்களா அரசில் கூடிய பங்கு வகிக்க வேண்டுமென்பதிலும்சிக்கலுண்டு.

சோவியத் வெளியேற்றத்தின் பின் ஆப்கான் தலைநகரான காபூலில் எதிர்ப்புரட்சியாளர்களின் றொக்கட் தாக்குதல்களால், பலர் கொல்லப்பட்டுள்ளனர். அத்துடன் அங்கு உணவுத்தட்டுப்பாடும் நிலவுகின்றது, சோவியத் தொடர்ந்தும் உணவு உதவி வழங்கிவருகின்றது.

பிரான்ஸ்
-----

மார்ச் மாதம் நடைபெற இருக்கும் நகரசபைத் தேர்தல்களில் சோசலிசக்கட்சியும், கம்யூனிஸ்ட்கட்சியும் சில இடங்களில் இணைந்து போட்டியிடவுள்ளனர்.

எல்சல்வடோர்
----------

நிக்கரகுவா பிரச்சனைக்கு தீர்வுகாண்பதற்காக பெப்ரவரி நடுப்பகுதியில் எல்சல்வடோரில் மத்திய அமரிக்க நாடுகளின் ஐந்து தலைவர்கள் சந்தித்துள்ளனர். 1990 பெப்ரவரி 25 இல் நிக்கரகுவாவில் பொதுத்தேர்தலை நடாத்த அதன் ஜனாதிபதி டானியல் ஒட்டேகா சம்மதித்துள்ளார். ஹொண்டுராஸில் இருக்கும் 12000கொன்ரா எதிர்ப்புரட்சியாளர்கள் ஆயுதத்தைக்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilrangam.net

கீழேபோடவேண்டுமெனவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

ஈரான்கொமெய்னி கொந்தளிப்பு

இங்கிலாந்தில் வசிக்கும் இந்தியரான சல்மான் ரஸ்டி என்பவர் எழுதிய "சாத்தானின்" வேதம் என்ற நாவல் முஸ்லிம் மதத்தவரிடையே பெரும் எதிர்ப்பைச் சம்பாதித்துள்ளது, பாகிஸ்தான், பங்களாதேஸ், இந்தியா, பிரிட்டன், ஈரான் போன்ற நாடுகளில் வாழும் முஸ்லீம்கள், இந்நாவலானது முகமது நபியை இழிவுபடுத்துவதற்காக எழுதப்பட்டது எனவும், இதனை இதனைத்தடைசெய்ய வேண்டுமெனவும் கூறி, இதன் பிரதிகளை எரித்து தமது எதிர்ப்பைக் காட்டியுள்ளனர். இவர்களிலும் மேலாக ஈரான் மதத்தலைவரான கொமெய்னி வெகுண்டெழுந்துள்ளார். இப்புத்தகத்தை தடைசெய்து, ஆசிரியரை கொல்ல வேண்டுமெனவும், அதனைச்செய்வோருக்கு பல இலட்சம் டொலர்கள் பரிசாக வழங்கப்படுமென அறிவித்துள்ளார். ரஸ்டி இப்போது பொலிஸ் பாதுகாப்பில் இருக்கிறார். இதே போன்று அங்கும் தொனிக்கும் மதத்துக்கு எதிரான ஒரு நாவல், இலக்கியத்திற்கான நோபல் பரிசு பெற்ற எகிப்தியர் நாஜிப்மஹ்பூஸ் என்பவரினாலும் 1956 ஆம் ஆண்டில் எழுதப்பட்டமை இங்கு குறிப்பிடத்தக்கது.

இது தவிர "இயேசுகிறிஸ்துவின்' கடைசி இச்சை" என்ற அமெரிக்கத் திரைப்படத்திற்கும் கிறிஸ்தவ மதவாதிகளிடையே பலத்த எதிர்ப்பு கிளம்பியதுடன், பிரான்ஸ் உட்பட பல நாடுகளில், இத்திரைப்படம் காண்பிக்கப்பட்ட பல திரை அரங்குகள், எரிக்கக் பட்டமையும் இதன்காரணமாக இத்திரைப்படம் பல நாடுகளில் தடை செய்யப்பட்டதும் விஞ்ஞானம், கருத்துச்சுதந்திரம் என்பவைகளுக்கெதிராக செயல்படும் மதவெறியர்களின் தொடர்ச்சியான அதிதீவிர நடவடிக்கைகளையே எடுத்துக் காட்டுகின்றன.


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

இஸ்ரேல்
-----

பாலஸ்தீனத்தின் காஸா பிரதேசத்தையும், மேற்குக்கரையோரத்தையும் உள்ளடக்கிய பகுதிகளில் மோதுமக்களுக்கும், இஸ்ரேலியத்துருப்புக்களுக்குமிடையே நேரடி மோதல்கள் அதிமாக வருகின்றன. கடந்த பதினைந்து மாத காலமாக சிறுவர்களும், பெண்களும் தமது கைககளில் கிடைத்த கற்கள், தடிகள் என்பவற்றினால் இஸ்ரேலிய இராணுவத்தினரை எதிர்த்து வருகின்றனர். இராணுவத்தினர் இரப்பர் குண்டுகளினாலும், உலோகமுனை கொண்ட பிளாஸ்டிக் குண்டுகளினாலும் சுடுவதால் பல சிறுவர்கள் இறந்துள்ளனர். இஸ்ரேலிய பிரதமர் இட்சாக்சமீர் கடந்த மாதம் பாலஸ்தீனத்தின் மேற்குக்கரையோரத்திலுள்ள நாப்ளஸ் என்னுமிடத்தில் நிலைகொண்டிருக்கும் இராணுவத்தினருடன் உரையாடியபோது, இராணுவத்தினர் பிரதமரிடம், 'நாங்கள் செய்யும் செயல்கள் எங்களை கண் கலங்க வைக்கின்றன. விரைவில் அரசியல் தீர்வு காணவேண்டும், எங்கள் எதிரிகள் கல் வைத்திருக்கும் பன்னிரெண்டு வயது சிறுவர்களும், பெண்களும்தான், எங்களால் அவர்களின் புரட்சியை தடுத்துவிட முடியாது', எனக் கூறியுள்ளனர்.

பராகுவே
------

பெப்ரவரி 2 இல் இங்கு நடந்த அரசு கவிழ்ப்பின் மூலம் 34 வருடங்களாக சர்வாதிகாரம் புரிந்த 76 வயதுடைய ஜெனரல் ஸ்ரோஸ்னர் தூக்கியெறியப் - பட்டார். அவரது வலதுகையாக இருந்த ஜெனரல் ஆன்ட்ரேஸ்ரொட்ரிகோஸ் இதை முன்நின்று நடத்தி அரசைக்கைப்பற்றியுள்ளார். 1954 மே 4ந் திகதி ஸ்ரோஸ்னர் மக்களால் தெரிவு செய்யப்பட்ட அரசை இராணுவ சதிமூலம் கைப்பற்றியவர். இதுநாள்வரை நாஸிகளினதும் பயங்கர குற்றவாளிகளினதும், போதைப் - பொருள் கடத்துபவர்களினதும் புகலிடமாக இந்நாடு விளங்கியது. புதிய ஜனாதிபதி, ஜனநாயகத்தை நிலைவச் செய்வது, மனிதஉரிமைகளை மதிப்பது, அரசசட்டங்களை

www.tamilrangam.net

மறுபரிசிலனை செய்வது ஆகியவை நனது முதல் செயற் திட்டம் என அறிவித்துள்ளார். தடைசெய்யப்பட்டிருந்தபல கட்சிகளினது தடை நீங்கியுள்ளதால் வெளிநாட்டில்தஞ்சம் புகுந்திருந்த பல அரசியல்தலைவர்கள் நாடு திரும்புகின்றனர். இவரினது ஆட்சியிலும் பல மாற்றங்கள் இருக்காது என நாடுதிரும்பிய தலைவர் ஒருவர் கூறியுள்ளார். ஆனால் பொலிவியன் கம்யூனிஸ்ட்கட்சியின் தடை இன்னும் நிங்கவில்லை.

## பிரெஞ்சு ஜனாதிபதியின் இந்திய விஜயம்

பிரெஞ்சுஜனாதிபதி பிரான்சுவா மித்தரேன் பெப்ரவரி நான்குநாள் விஜயமொன்றை இந்தியாவுக்கு மேற்கொண்டார். அங்கு உலகிலேயே மிக நவீனமான பெரிய "வக்சீன்" தடுப்பூசி மருந்து உற்பத்தி நிறுவனம் ஒன்றுக்கான ஆரம்பவேலைகள் இவரால் தொடங்கி வைக்கப்பட்டது.

## சீனு

சோவியத் வெளிநாட்டு மந்திரி செவர்னட்ஸ் சீனுவிற்கு சென்றுள்ளார். 30 வருடங்களின் பின் ஒரு சோவியத் மந்திரி சீனுவிற்கு விஜயம் செய்வது இதுவே முதல்தடவையாகும். இவரின் விஜயம் கோர்பச்சேவ், டெங்சியாவோபிப் சந்திப்புகுறித்து ஆராயவே. இவர்களது சந்திப்பு மே மாதத்தில் நடைபெறும் என எதிர்பார்க்கப் - படுகிறது. அத்துடன் சீன சோவியத் எல்லை, கம்பூச்சிய விவகாரம், ஆப்கான் விவகாரம் பற்றியும் இவர் பேச்சுவார்த்தைகள் நடத்தியுள்ளார்.

## போபால்

போபாலில் நடந்த விபத்துக்காக யூனியன் கார்பட் நஸ்டஈடாக 47 கோடி டொலார் செலுத்த வேண்டும் என டெல்லி நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது. 3350 - மக்களைக் காவுகொண்டதும், 30,000 மக்களுக்குமேல் பாதிக்கப்பட்டதுமான இந்தவிபத்துக்காக இந்திய அரசாங்கம் முதலில் நஸ்டஈடாக3000 கோடி ரூபாய் கேட்டிருந்தது. ஆனல் இதன் 16%மட்டுமே வழங்கப்பட்டிருக்கிறது. இதனை எதிர்த்து பாதிக்கப்பட்ட மக்களும், போபால் வாசிகளும் ஆர்ப்பாட்டம் செய்கின்றனர்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilrangam.net



# சர்ரியலிசமும் சல்வடோர் டாலியும்

அருந்ததி

இது சல்வடோர்டாலியின்வாழ்க்கைக் குறிப்பல்ல. அவரை மையப்படுத்தி ஓவியத்துறையையும், சர்ரியலிசத்தைப்பற்றியும் அறிமுகம் செய்து வைக்கும் ஒரு முயற்சியேஆகும்.

இவ்வாண்டின் ஜனவரி இருபத்திமூன்றும் திகதி ஸ்பெயின் நாட்டைச் சேர்ந்த தலைசிறந்த ஓவியர் சல்வடோர்டாலிஇறந்து போனார், என்ற செய்தி ஓவிய ஆர்வலர்களுக்கு வருத்தத்தைக் கொடுத்திருக்கும். பிரான்சிலும், ஏனைய ஐரோப்பியஅமரிக்க–நாடுகளிலும் பரபரப்பாக பேசப்பட்ட, மிக அதிகமானவிலை போன இவரது ஓவியங்கள் பார்வையாளர்களை ஒன்றில் வியப்புக்குள்ளாக்கின, அல்லது முகம் சுளிக்கவைத்தன.

குறைந்த பட்சம் புரிந்துகொள்ளல் எனும் எல்லைக்குள்ளாவது தமது பார்வையைச் செலுத்தும் விளையும் நவீன கலை, இலக்கிய இரசனையின் பாற்பட்டவர்களும்விளங்குதல், அல்லது விளங்கமுயற்சித்தல் என்னும் நிலையில் அறிவுத்தளத்தில் ஓரளவு அகலிப்பினை அடைந்தவர்களும் கூட, சல்வடோர்டாலியின் ஓவியங்களைப் பொறுத்தவரையில் இவ்இரு வேறுபாடுகளும்மற்ற, அல்லது வேறுபாடுகளைக் களைந்த ஓர் சமதளத்திற்குள்தம்மை நிறுத்திக்கொள்ளும் அளவிற்கு மறைந்து நிற்கும். வெளிப்பாட்டு ரீதியான கருப்பரிமானம், அல்லது கனதி, சல்வடோர்டாலியின் ஓவியங்களுக்குமாத்திரம்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilrangam.net

அல்ல ஏனைய சார்ரியலிச ஓவியர்களின் படைப்புக் களுக்கும் பொருந்தும். என்றாலும் டாலியின் ஓவியங்கள் – இதில் ஒருபடி மேலேதான் நிற்கின்றன. என்றாலும், புதிர்களை எழுப்புவதாக அமைந்த இவரது ஓவியங்கள் ஐரோப்பிய நவீன ஓவியத்துறை வளர்ச்சிக்கு எடுத்துக் காட்டுகளாக நிற்கின்றன, என்பதை யாராலும் மறுக்க முடியாது.

புகைப்படக் கருவி கண்டுபிடிக்கப் படுவதற்கு முன்னர் ஓவியம் என்பது நகலெடுக்கும் ஒரு விடயமாகவே, அதாவது இயற்பண்பு வாதத்தை அடிப்படை – யாகக் கொண்டு, புறநிலையில் உள்ள தோற்றப் – பாடுகளை உள்ளது உள்ளவாறு அப்படியே தீட்டுதல் அல்லது பதிவு செய்தல் என்பதான ஒரு குறுகிய தன்மையைக் கொண்டதாகவே இருந்தது. புகைப்படக் கருவி கண்டுபிடிக் கப்பட்டதும் இனி ஓவியத்துக்கு அவசியமில்லை, அதனுடைய வேலையைத்தான் இனிமேல் புகைப்படக்கருவி செய்யுமே என்ற எண்ணம் அக்கால ஓவியர்களிடையே எழுந்தது. எனவே அதுவரை காலமும் நகலெடுத்துவந்த ஓவியத் துறைக்கு ஒரு "மாற்று" தேவை என்பது உணரப்பட்டது. இந்நிலையிலேயே தம்மைச் சுற்றியிருக்கும் உலகத்தைப் பதிவு செய்து கொள்ள இனி ஓவியம் தேவையில்லை – எனவும் நிழற்படக்கலை ஏனின் சாதனைக்கு மீறிய செயல் களை ஓவியத்தினால் சாதிக்க வேண்டியுள்ளதெனவும் பெரு முனைப்போடு அக்காலத்தில் "இம்ப்ரவினிசம்" என்ற ஓவிய இயக்கம் உருவாகி பெரும்புகழ் பெற்றது. இது உலகத்தை ஒரு நகரத்து மனிதனின் கண்களின் வழியாகக் கண்டது. பொருளை ஓவியத்திற்குரிய ஓர் கருப்பொரு ளாகக் கருதாமல் அதிலிருந்து ஒரு தொனியை எழுப் புவதே இதன் நோக்கமாக இருந்தது. ஏனெனில் அப்போ துதான் ஓவியம் என்பது நகலெடுக்கப்படுமென்றாக இல்லாமல் அது படைப்பு நிலைக்கு உயர்த்தப்படுமென்று இம்பிரவினிஸ்டுகள் நினைத்தனர். வாழ்க்கையில் சில கணங்கள் நமக்கு மிகவும் முக்கியமானதாகவிளங்குகின்றன. வாழ்வின் முக்கியமான இக்கணங்கள் எம்முன் எப்போ தாவது ஓர் முறை தோன்றி மறைந்துவிடுகின்றன. அப்படித் தப்பியோடும் கணங்களை திரைச்சீலையில் பிடித்து நிறுத்தும் முயற்சியாகவே இம்ப்ரவினிஸ்டுகளின் ஓவிய முறை அமைந்

www.tamilrangam.net

திருந்தது. இதில் ஒளியின் பங்கையே அவர்கள் பெரிதும் வற்புறுத்தினர். "ஒளிதான் என் ஓவியங்களில் பிரதானம்" என்று மானேற் என்ற இம்பிரவினிச ஓவியர் கூற்றில் இருந்து இதை உணரலாம். ஒளியைப் பிரதானப்படுத்தும் போது இவர்கள் ஓவியத்தின் உருவத்தைப்பற்றி அக்கறை கொள்ளவில்லை.

இவ்வியக்கத்தின் பின், எதிர்விளைவாகவே நவீன ஓவியக்கலை இயக்கம் உருவாகியது. எனவே நவீனக் கலைக்கு இம்பிரவினிசம்தான் பாதை அமைத்துக்கொடுத்ததெனலாம். கியூபிசம், ஆர்பிசம், ருஸ்ஸியாவின் கனஸ்ட்ரக்டிவிசம், ஜெர்மனியின் எக்ஸ்பிரவிஸிசம், போவிசம் போன்ற நவீன கலையுலக இயக்கங்கள் யாவும் இதன் பின்னரே தோற்றம் பெற்றன. புதிலையில் உள்ளபொருட்களை, காட்சிகளை, அல்லது தோற்றப்பாடுகளைஉள்ளது உள்ளவாறேதீட்டிவந்த ஓவியர்கள் பின்னர்பொருட்களை உருமாற்றுதலும், அகவுணர்ச்சியின்பால் அவற்றை உருச் சிதைத்து வெளிப்படுத்துதலுமே, கலையின் இன்றியமையாப் பண்பென நவீன கலை இயக்கரீதியான தமது புதிய கருத்தை வெளிப்படுத்தினர்.

எக்ஸ்பிரவினிசம் உருவத்தைச் செழுமைப் படுத்துவதைத் தவிர்த்து உள்ளடக்கத்திற்கு முக்கியத்துவம் கொடுத்தது. இதுவரைகாலமும் பொருட்களை நாம் பார்த்து வந்தது போல் அல்லாமல் அதற்குள் மறைந்து கிடக்கும் உண்மைகளை, அதன், இயல்பு, பண்புகளை தமது அகவுணர்வுகளுக்கேற்ப பகுந்து அதன் முக்கியமான கூறுகளைமாத்திரம் தமது மனநிலையிலிருந்து புலக்காட்சிநிலைக்கும் உருவத்திற்கும் முக்கியத்துவம் கொடுத்து வெளிப்படுத்தும் தன்மையே கியூபிசமெனப்பட்டது. எனவே இதன்மூலம் கியூபிசமானது ஒரு பொருளினைதிறனாய்வுக்கும் பகுப்பாய்வுக்கும் உட்படுத்துகிறது. எனலாம். இதற்கு முன்னோடி "பிக்காசோ" ஆவார். இவர்தவிர பிராக், மெட்ஸிங்கர், கிரிஸ் என்போரையும் கியூபிச ஓவியர்களாகக் குறிப்பிடலாம்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilrangam.net

கியூபிசத்தின் படிமுறை வளர்ச்சியாக வந்த ஆர்பிசம் வர்ண வேறுபாடுகளை அடிப்படையாகக்கொண்டு றொபேர்ட் டிலானே என்பவரால் தோற்றுவிக்கப்பட்டது. வேறுபட்ட வர்ணச் சேர்க்கையினூடு, அதன் ஒருங்கிசைவால் ஓவியங்களில் கருத்துக்களைத் தெளிவாக வெளிப்படுத்த முடியும் என்பது டிலானேயின் கூற்று. ஆர்பிச ஓவியர்களாகமேலும் லெகர், பிகாபியா, டூசோம் போன்ற ஓவியர்களையும் குறிப்பிடலாம்.

1905ல் பாரிசில் புகழ்பெற்றிருந்த போவிசம் எனப்படும் கலை இயக்கத்தினரின் ஓவியங்களிலுள்ள ஆடம்பரமான அலங்காரத்தன்மைகளை கியூபிஸ்ட்டுகள் புறக்கணித்தனர். போவிஸ்ட்டுகள் பொருட்சிதைப்பையும், அழுத்தமான நிறச்சேர்க்கையையும்கொண்டிருக்க, கியூபிஸ்ட்டுகள் இயற்கைப் பொருட்களின்கருத்து வடிவம், புலக்காட்சிநிலை, உருவம்என்பவற்றிற்கு முக்கியத்துவம் கொடுத்தனர்.

வெளிப்படையாக இருக்கும் உலகின் பொருட்களை ஓவியன் வரைகிறான், ஓவியத்தில் உள்ள பொருளுக்கும் உண்மையான பொருளுக்குமிடையே அப்போது ஒரு இடைவெளி தோன்றுகிறது. படைப்பு என்பது நகலெடுத்தலாக இருப்பதால்தான் இந்த இடைவெளி தோன்றுகிறது. இந்த இடைவெளியைத் தகர்ப்பது கலைஞனின் கடமை. என புதுமையியலின் முன்னோடியாகவும் பிரெஞ்சுக் கவிதை இலக்கியத்தில் பல புதுமைகளைச் செய்தவருமான அப்போலினேர் என்பவர் கலைஞர்க்கு வேண்டுகோள் விடுத்தார். இந்த இடைவெளியை எப்படித் தகர்ப்பது? இங்கேதான் சர்ரியலிசம் வருகிறது. சர்ரியலிஸ்ட்டுக்கள் இதற்கு விடை சொல்லுகின்றனர். சர்ரியலிச ஓவியர்கள் தமது ஓவியங்களில் அதனைச் செய்தும் காட்டினர். இதனைசர்ரியலிசம் ஓவியத்துறைக்குச் செய்த பங்களிப்பாக அல்லது தாக்கமாக எடுத்துக் கொள்ளலாம். ஆம் சல்வடோர்டாலி ஒரு சர்ரியலிஸ்ட், ஒருசர்ரியலிச ஓவியர். சர்ரியலிச ஓவியர்கள் எதைச் சாதித்தார்கள்? இயற்கைப் பொருளுக்கும் ஓவியப்பொருளுக்குமிடையே உள்ள



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்


www.tamilrangam.net

இடைவெளியை எப்படித் தகர்த்தார்கள்? இதற்கு விடை கூறுமுன் சர்ரியலிசம்பற்றி கொஞ்சமாது தெரிந்து கொள்ளவேண்டும்

சர்ரியலிசம் என்றால் என்ன?

இந்தக் கேள்வியின் இன்றைய முக்கியத்துவம் குறைந்து விட்டதெனினும், இருபதாம் நூற்றாண்டின் இருபத்திமூன்று இருபத்திநான்குகளில் ஆவலுடனும், முகச்சுளிப்புடனும்விவைப் பட்ட அதிமுக்கியம் வாய்ந்த ஒன்றாக இவ்விது அமைந்தது. இன்று வெறும் கலை, இலக்கிய உத்தியாகமட்டும் தேய்ந்து போன இச்சர்ரியலிசம் பற்றிய முழு விடயத்தினையும் விளக்கின் அதுவே ஓர் தனி நூலாகிவிடும். எனினும் சல்வடோர்டாலி போன்ற இன்னும் பல சர்ரியலிசக் கலை இலக்கிய வாதிகளினதும் படைப்புக்களின் புதிர்களை விடுவிப்பதற்காக அல்லது விளங்கிக்கொள்வதற்காக ஓரளவிற்கு சர்ரியலிசம் பற்றி அறிந்து கொள்ளுவது — அவசியமாகின்றது.

(மிகுதி அடுத்த இதழில்)






தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilrangam.net




## 1871ம் ஆண்டு - பாரீஸ் கம்யூன்

பாரீஸ் நகரில் நடைபெற்ற பாட்டாளி வர்க்கப்புரட்சியால் 1871 இல் நிறுவப் பெற்ற தொழிலாளிவர்க்கப் புரட்சி அரசாங்கம், உலகின் முதலாவது பாட்டாளிவர்க்கச் சர்வாதிகாரமாய்த் திகழ்ந்த இந்த அரசாங்கம் பங்குனி 18 லிருந்து வைகாசி 28 வரை 72 நாட்கள்நீடித்தது.

இதனைப்பற்றி கார்ல்மார்க்ஸ் "பிரான்சில் உள்நாட்டுப் போர்" எனும் தனிநூலையும் எழுதியிருக்கிறார். இப் பாட்டாளி வர்க்க அரசு தோற்கடிக்கப்பட்டது. தோல்வியின்பின் BELLVILLE இலும் MENILMONTANT இலும் வைத்து ஆயிரக்கணக்கான தொழிலாளர்கள் கில்லட்டின் மெசினால் சிரச்சேதம் செய்யப்பட்டனர். இந்த அராஜகத்தில் அப் போததான் பிரஷ்யாவின் தலைமையில் ஒன்றுபட்டிருந்த ஜேர்மன் கூட்டுச் சேர்ந்திருந்தது.

பாரீஸ் கம்யூன் தோல்வியிலிருந்து எடுக்கப்பட்ட முடிவு (மார்க்ஸாலும், எங்கெல்ஸாலும்) புரட்சியின் பின்னை, ஏற்கனவேயுள்ள "அதிகாரவர்க்க இராணுவ-அரசுப்பொறி - யமைவு" அடித்து நொறுக்கி அழித்தொழிக்கப்பட்டுஅதற்குப் பதிலாக புரட்சிகர மக்கள் கூட்டத்தில் இருந்து தெரிவு செய்யப்படவேண்டும் - புரட்சியை நடத்திய சேனையில் இருந்து தெரிவு செய்யப்படவேண்டும் என்பதாகும்.

www.tamilrangam.net




தமிழர்களின் பிரிவினைப் போராட்டம் இலங்கை, இந்திய ஒப்பந்தம், இந்திய அமைதிப்படையினர் வருகை, தெற்கில் "ஜனதா விமுக்தி பெரமுனையின்" ஆயுதப்போராட்டம், மலையகத் தமிழர்களுக்கு வாக்குரிமை இப்படியான ஒரு சூழ்நிலையிலேயே ஒன்பதாவது பாராளுமன்றத் தொடருக்கான பொதுத்தேர்தல் நடைபெற்றது.

பன்னிரெண்டு வருடங்களாக, ஆட்சி செய்த ஐக்கிய தேசியக்கட்சியானது மேலும் தனது ஆட்சியை நீடித்துக் கொள்வதற்காக ஒரு புதிதான விகிதாசாரத்தேர்தல் முறையை இத்தேர்தல் மூலம் அறிமுகப்படுத்தியது. இக்கட்சியின் ஆட்சியிலேயே இலங்கை-இந்திய ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டு மாகாணசபைகள் உருவாக்கப்பட்டன. ஏறத்தாள 2 இலட்சத்து 50 ஆயிரம் மலையகத்தமிழர்களுக்கு வாக்குரிமை கொடுக்கப்பட்டது. ஜனாதிபதித் தேர்தலிலே - ஐக்கிய தேசியக்கட்சி, பெரும்பான்மை வெற்றி பெற்று இருந்தாலும், இத்தேர்தல் ஒரு சிக்கலானதாகவே இருந்தது.

ஏறத்தாள நாற்பது வருடங்கள் இனவாதம்பேசியே ஆட்சிக்கு வந்த சிங்கள அரசாங்கங்கள், எனி அது எத்தனை தூரம் சாத்தியமாகும் என்பது தேர்தல் மூலம் வெளியாயிற்று. இலங்கை இந்திய ஒப்பந்தத்தை ஏற்கமாட்டோம் என்று



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilrangam.net

பிரச்சாரம் செய்யும் சிங்களமக்களிடையே (ஒருபகுதியினர்) ஐக்கியதேசியக்கட்சி இலங்கை இந்திய ஒப்பந்தத்திற்கு ஆதரவாக பிரச்சாரம் செய்து, தேர்தலில் வெற்றிபெற்றது. பெரும்பான்மை சிங்களமக்கள், தமிழ் மக்களுக்கு உரிமைகள் வளங்கப்படவேண்டும் என்பதை ஏற்றுக்கொண்டுள்ளனர் என்பது வெளிப்படை. முன்னர் போல் எனி சிங்கள பேரினவாதம் ஆட்சி செய்ய முடியாது என்பது உறுதியாகிவிட்டது.

வடக்கில், கிழக்கில் மட்டும் அல்ல மலையகத்திலும் வாழும் தமிழர்களின் வாக்கு இல்லாமல் இனிமேல் ஆட்சிபீடம் ஏறமுடியாது என்பதும் உண்மையாகும். இலங்கை–இந்திய ஒப்பந்தத்திற்கு எதிராகவும் இந்திய அமைதிப்படைக்கு எதிராகவும், பேசிவந்த திரு அனுராபண்டாரநாயக்கா, தமிழ் மக்கள் மீது கொண்ட அவநம்பிக்கையின் பேரிலேயே நுவரெலியாத் தொகுதியைவிட்டு, கம்பவிகாத் தொகுதியில் போட்டியிட்டார்.

வடக்கு, கிழக்கு மாகாணசபைத் தேர்தலில், ஐக்கியதேசியக்கட்சி ஒரு தொகுதியை மட்டும் பெற்றிருந்தது. நடைபெற்ற பொதுத்தேர்தலிலோ, வவுனியாவில் போட்டியிட்ட திருமதி இராஜமங்கைகரி புலேந்திரன் (3260 வாக்குகள்) மட்டுமேபெற்று, பாராளுமன்றத்துக்கு தெரிவாகியுள்ளார். அதேபோல் திரு. எம். ஈ. எல், மஹரூப் என்பவர் 10,000 வாக்குகள் பெற்று திருமலையில் இருந்து தெரிவாகியுள்ளார். இவர்களைத்தவிர, தமிழர்களின் பிரதிநிதிகளாய் தெரிவாகி உள்ள எல்லோருமே, இளையதலைமுறையினராகும் குறிப்பாக தீவிரவாத கட்சிகளைச் சேர்ந்தவர்களாகும். இதனை, தமிழ் மக்கள் இன்னமும் தமது தீவிரவாத போக்கில் இருந்து மாறுபடவில்லை என்று கொள்ளலாம்.

இவ் மாவட்டங்களில் ஐக்கியதேசிய கட்சியின்சார்பில் போட்டியிட்ட திருவாளர் தேவநாயகம் தோல்வி அடைந்துள்ளார்.

www.tamilrangam.net

புதிய விகிதாசார முறைத்தேர்தல் முறை மூலம், பெரும்பான்மை பெற்று ஐ.தே.க. கைப்பற்றியிருந்தாலும், ஒரு சில மாவட்டங்களில் விருப்பு வாக்குகளை பெறமுடியாமல், கட்சியின் முக்கிய உறுப்பினர்களை இழந்துள்ளது. கண்டியில் திரு. ஈ. எல். சேனநாயக்கா நீர்கொழும்பில் திரு. டென்சில். பெர்னாண்டோ இதில் அடங்குவர். கொழும்பு மாவட்டத்தில் போட்டியிட்ட, திரு செல்லையா இராசதுரை யும் தோல்விஅடைந்துள்ளார்.

ஆனால், இந்த புதியமுறை மூலம், எதிர்க்கட்சிகள் கூடுதலான ஆசனங்கள் பெற்றுள்ளன. சிறீலங்கா சுதந்திரக்கட்சி, 1977 தேர்தலிலும் இன்றைய தேர்தலிலும் பெற்ற வாக்குகளின் எண்ணிக்கையில் பெரிய அளவு மாற்றம் இல்லாவிட்டாலும், புதிய முறை தேர்தல்மூலம் கூடுதலான ஆசனங்களைப் பெற்றுள்ளன. (பார்க்க அட்டவணை) அத்தோடு மட்டும்அல்லாமல், கொழும்புமாவட்டத்தில் இருந்து மக்கள் ஐக்கிய முன்னணித்தலைவர், திரு தினேஸ் குணவர்த்தனவும், திரு. பந்துல குணவர்த்தனவும் ஐக்கிய சோசலிச முன்னணியில் திரு. வாசுதேவ நாணயக்காராவும், கேகாலையில் சமாசமாஜக்கட்சியைச் சேர்ந்த திருஅதாவிட செனவிரத்தனவும், பாராளுமன்றத்திற்கு தெரிவாகியுள்ளனர்.

ஐக்கிய தேசியக்கட்சியுடன் இணைந்து ஏழு மாவட்டங்களில் போட்டியிட்ட இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ், கொழும்பில் மட்டுமே ஒருபிரதிநிதித்துவத்தை பெற்றுள்ளது. திரு. செல்லச்சாமி 36480 விருப்பு வாக்குகளைப் பெற்று தெரிவாகியுள்ளார்.

புதிதாக வாக்குரிமை பெற்ற, 2 இலட்சத்து50 ஆயிரம் வாக்காளர்களுடன், நிறையவே தமிழர்களின் வாக்குகளைக் கொண்ட மலையகத்தில் – போட்டியிட்ட, ஏழு மலையகத் தமிழர்களும், வெற்றி பெறவில்லை என்பது, இலங்கைத் தொழிலாளர் காங்கிரசின் எதிர்காலத்திலும், அதன் தலைமையிலும் அங்குள்ள மக்களின் அவநம்பிக்கையை காட்டுகிறது.

www.tamilrangam.net

நுவரெலியாத் தொகுதியில் போட்டியிட்ட, DLF என் அரசியல் கட்சியான ஜனநாயக மக்கள் விடுதலை முன்னணியின் வேட்பாளர் திரு. சந்திரசேகரம் என்பவருக்கு 10,509 விருப்பு வாக்குகள் கிடைத்துள்ளது என்பது கொழும்புத் தலைமைகளைவிட, வடக்கு, கிழக்கில் இருந்து வருகின்ற தலைமைகளையும் ஏற்றுக் கொள்ளத் தயாராகிவிட்டார்கள் என்பதை வெளிப்படுத்துகிறது.

திரு. தொண்டமான், தேர்தல் முடிவுகளின் பின்னர் வெளியிட்ட அறிக்கையில், யாழ்ப்பாணத்தவர்கள் மலையகத்தில் நுழைந்துவிட்டார்கள் என்றும், அவர்களது கொள்கைகளும் அங்கு புகுந்துவிட்டனஎன்றும்கூறியுள்ளார்.

இத் தேர்தல் முடிவுகள் மூலம் நாம் ஒன்றை மட்டும் புரிந்து கொள்ளலாம். சிறுபான்மை மக்களின் ஆதரவு இன்றி அவர்களின் செல்வாக்குமின்றி யாருமே ஆட்சியைக் கைப்பற்ற முடியாது என்பதுதான். சிறுபான்மை மக்களுக்கு உரிமைகளை வளங்கிலைன்றி, அவர்கள் எப்போதுமே பெரும்பான்மையினரின்கட்சிகளை ஆதரிக்கமாட்டார்கள் என்பதை, வடக்கு, கிழக்குமாகாண தமிழ்மக்கள் மீண்டும் நிரூபித்துக் காட்டியுள்ளார்கள். மலையகத்தைப் பொறுத்தவரையில், அங்குள்ள தமிழர்கள் எத்தனை நாட்களுக்கு திரு. தொண்டமானின் தலைமையை ஏற்றுக் கொண்டிருப்பார்கள் என்பதும், திரு தொண்டைமானை தம்வசப்படுத்துவதின் மூலம் மலையக மக்களின் வாக்குகளைப் பெற்றுக் கொள்ள முடியாது என்பதும் நிரூபணமாகிவிட்டது.





தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilrangam.net

# — அட்டவணை…

| கட்சி | 1977 |
|---|---|
| ஐக்கிய தேசியக் கட்சி (UNP). | 3,179,221 |
| ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி (SLFP) | 1,855,331 |
| சுயேட்சைக் குழு (EROS)<br>ஈழப் புரட்சி அமைப்பு.<br>(வடக்கு/கிழக்கு மாகாணத்தில் மட்டும் போட்டியிட்டனர்) | — |
| கூட்டணி.<br>(TULF, TELO, EPRLF, ENDLF) | (TULF தனியாகப் போட்டியிட்டது)<br>4,21,488 |
| ஸ்ரீலங்கா முஸ்லீம் காங்கிரஸ் (SLMC) | — |
| ஐக்கிய சோசலிச முன்னணி (USA) | — |
| மக்கள் ஐக்கிய முன்னணி (MEP) | — |
| ஜனநாயக மக்கள் விடுதலை முன்னணி.<br>(PLOT ன் அரசியல் கட்சி). | — |
| அகில இலங்கை தமிழ் காங்கிரஸ். | 1977 தேர்…<br>சுயே.2 பே… |

* இலங்கை தொழிலாளர் காங்கிரஸ், ஐக்கிய தேசியக் க…
பொதுத் தேர்தலில் போட்டியிட்டது

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilrangam.net

ள

| ...ாக்கு வீதம் | கிடைத்த தொகுதிகள் | 1989 | வாக்கு வீதம் | கிடைத்த தொகுதிகள் | தேசிய அமைப்பு பட்டியல் தெரிவானவர்கள் |
|---|---|---|---|---|---|
| ...50.92 | 140 | 2 837, 961 | 50.71 | 110 | 15 |
| ...9.72 | 8 | 1,780,599 | 31.82 | 58 | 09 |
| — | — | 2,29,877 | 4.1. | 12 | 01 |
| ...5.75 | 18 | 188593 | 3.37. | 09 | 01 |
| — | — | 2,02,044 | 3.61 | 03 | 01 |
| — | — | 160271 | 2.9 | 02 | 01 |
| — | — | 95793 | 1.7 | 02 | 01. |
| — | — | 18,504 | 0.33 | — | — |
| ...ல இது சுயேட் ...புயிட்டது. | | 7,610 | 0.14 | — | — |

...யுடன் போட்டிக்கு கட்டுரை

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilrangam.net

# வியாக்கியானம்

சென்ற இதழில் வியாக்கியானம் பகுதித் தொடரில் பழமொழிகள், மற்றும் நீதி போதனைகள் பற்றிய எமது ஆய்வில் சமூகத்தில், வழக்கில் இருந்துவரும் இது சம்பந்தமான அனைவற்றையும் ஆராய்ந்துபார்ப்பது எமது நோக்கமாக இருந்தாலும், அந்தந்தசமூக சூழலிற் கேற்ப இந்த மொழி வழக்குகள், அவை வெளிப்படுத்தும் விதங்களில் சிறிது மாறுபடுவதுமுண்டு. இத் தொடரில் இம் மொழிவழக்குகள் பல்வேறு சூழல்கள் தேவைகளின் நிமித்தம் முரண்பாடுள்ளவையாகவோ அன்றி மாறுபாடுள் ளவையாகவோ தோன்றுவனவற்றை ஓர் பொதுக் கருத்திற்காக உங்கள் முன் வைக்கவிரும்புகிறோம்.

"உன்னைத் திருத்திக்கொள்சமூகம் தானாகவே திருந்திவிடும்"

இம்மொழிவழக்கில் சமூகத்திற்கும் தனிமனித னிற்குமுள்ள தொடர்பு குறித்து எடுத்தாளப்பட்டிருக்கிறது இதன் கருத்தில் உணர்த்துவது.

(1) சமூகத்தில் தவறு உண்டென்பதல்ல சமூகமேதவறாக இயங்கிக் கொண்டிருக்கிறது.
(2) ஒவ்வொரு தனி மனிதர்களும் தவறிழைத்துக்கொண் டிருக்கிறார்கள்.
(3) சமூக இயக்கத்திலிருந்து தனி மனிதன் தனித்து இயங்கலாம்.
(4) அவனது திருந்துவதற்கான விருப்பமின்மைதான் தவறான முழுச் சமூக இயக்கத்தோடும் அவனைச் சேர்த்துக் கெடுத்துக் கொண்டிருக்கிறது.

இம்மொழி வழக்கு புறப்பார்வைக்கு ஓர் உன்னதமான போதனைபோல் தோன்றினாலும் இது உண்மையில்சுரண்டும் சமூக அமைப்பின் சீரழிவுகளைக் காப்பாற்றுவதற்கான நயவஞ்சக முதலாளித்துவக் கருத்தியலைஅடிப்படையாகக் கொண்டது.

www.tamilrangam.net

இம்மொழி வழக்கின் மீது வைக்கப்படவேண்டிய கேள்விகள்.

(1) தவறுகள் எந்த சூழ்நிலையில் தோன்றுகின்றன ?

(2) சமூகத்தில் சில பகுதியினரின் குறும்சங்கள் அல்லது அபிலாசைகள் பிறபகுதியினரின் நலன்களோடு முரண்படுகிறதே.... அது ஏன்? அதற்குக் காரணம் சுரண்டலும் தனிச் சொத்துடைமையும்தான்.

தவிர, மனித இனத்தையே பாவம் சூழத் தொடங்கியது ஆதாம் அப்பிளைக் கடித்ததாலோ, (பைபிள்) அல்லது முன் வினை செய்வினைகளினாலோ அல்ல.

"துட்டனைக் கண்டால் தூர விலகு" என்பதும் "எங்களளவில் நாங்கள் சரியாய் நடந்தால் சரி யார் எக்கேடு கெட்டால் நமக்கென்ன" என்பதும் இந்த தப்பித்தலிலும் தந்திரோபாயத்திலும் இதனூடு தோன்றியதே. ஒருவன் நியாய வாதியாக இருக்கமுடியுமென்பது அநியாயவாதிகளும், அயோக்கியர்களும், கேவலமானவர்களும் இருக்க அவசியமில்லாத, இருக்க முடியாத சமூக அமைப்பை நிர்மாணிப்பதற்காக இந்த குறும்சங்களுக்கெதிராக தன்னையொத்த ஏனைய சமூகமனிதர்களுடன் இணைந்து போராடுவதனால்தான் சாத்தியமாகும்.

— சுதன் —



www.tamilrangam.net

# தேடல்

## நூல் அறிமுக நிகழ்வு பற்றி....

சத்தியா

மக்கள் கலை இலக்கிய அமைப்பின் "தேடல்" மாதாந்த சஞ்சிகையின் முதலாவது இதழ் அறிமுக நிகழ்வு, 177, RUE DE CHARONNE இல் அமைந்துள்ள மண்டபத்தில் 22-01-1989 ஞாயிறு மாலை நடைபெற்றது.

ஐரோப்பிய மண்ணிலே அகதிகளாகக் கருதப்படும் எம் மக்களில பெரும்பாலோரின் வாழ்க்கை நிலைப்பாட்டின் பிரதிபலிப்புக்கள், அவர்கள் எம்தாம் நாட்டிலிருந்து அந்நியப்பட்டுக் கொண்டு போவதையே ஐயமின்றித் தெரிவிக்கின்றது. அவர்களை மேலும் அந்நியப்படுத்துவதற்கான சூழலை உருவாக்கி சுயலாபம் தேடுகின்ற தனிநபர் குழுக்கள் இங்கு காணப்படுவதும் வருந்தக் கூடியதொன்றாகும். இருந்த போதிலும், எமது மக்களை எமது நாட்டுடன் - அந்நியோன்யப்படுத்தும் முற்போக்கு சக்திகளும் கூட, இன்று எம்மிடையே இல்லாமலில்லை.

எமது இந்நிலைப்பாட்டில், வரலாற்றுத்தேவையின் விளைவாக, உதிரிகளாக இருந்த பல முற்போக்குச் சக்திகளின் ஒன்றிணைவினால், இம் "மக்கள் கலை இலக்கிய அமைப்பு" இங்கு வெளித்தோன்றியிருப்பது மனதுக்கு நிறைவையளிக்கின்றது.

இவ்வமைப்பு இங்கு தோற்றம் பெற்றிருப்பது என்பது தவிர்க்க வியலாத - சூழல் இசைவாக்கம் என்பதும் சமுகவிஞ்ஞானம் பற்றி உணர்வு பூர்வமாக கருத்துக் கொண்டிருக்கும் யாவரும் ஏற்றுக் கொள்ளக்கூடியதாகும்.

இந்நிகழ்வின் ஆரம்பத்தில் எமது மக்களின் தியாக மரணங்களை நினைவுகூர்ந்து இரு நிமிட மௌன அஞ்சலி செலுத்தப்பட்டது. அதன்பின் கருத்துப்பரிவர்த்தனைகள் ஆரம்பிக்கப்பட்டன. சாதாரணமாக மற்றக் கூட்டங்களிலோ, நூல் அறிமுக விழாக்களிலோ நடைபெறுவது போன்று, இங்கு அமைப்பாளர் களுக்கென்று பிரத்தியேகமான மேடையொன்று காணப்படாததும், அங்கு

நாற்காலிகள் போடப்பட்டிருந்த பாங்கு சகலரும் தத்தம் இருக்கையில் இருந்தவாறே; அனைத்து முகங்களையும் பார்த்து தத்தம் கருத்துக்களைத் தெரிவிக்கக் கூடியதாகவும் அமைந்திருந்ததும் ஆரம்பத்திலேயே அவ்வமைப்பு பற்றி அனைவரின் கவனத்திலும், ஒரு புதிய நிலையைத் தோற்றுவித்தது.

முதலில் திரு. பரணி அவர்கள், கருத்துப்பரிமாறலைத் தொடக்கி வைத்தார். இவ்வமைப்பால், இச் சஞ்சிகை வெளியிடுவதன் நோக்கம் பற்றிக் குறிப்பிடுகையில், சமுக பொருளாதார அரசியல் காரணங்களால், எம் தேசத்தில்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilrangam.net

இருந்து வெளியேறிய எம்மக்கள், தேசத்திலிருந்து அந்நியமாகிப் போனதையும், இவர்களை மேலும் அந்நியமாக்கும் முயற்சியில் ஈடுபடுபவர்களை அல்லது - திசை திருப்புபவர்களை இனங்காட்டி, மக்களை தேசத்தோடு ஐக்கியப்படுத்தும் ஓர் ஊடகமாக இத் தேடலைப் பயன்படுத்துவது எனத் தெரிவித்தார்.

தொடர்ந்து திருமதி. தர்சினி அவர்கள், வரவேற்புரையும், நன்றியுரையும் நிகழ்த்தினார். இவர் தனதுரையில் சிந்தனைகளை ஒருமுகப் படுத்தி கருத்துக்களைத் தேடித்திரிந்தவர்கள் ஒருங்கிணைந்த, இவ்வமைப்பானது; தனிப்பட்ட ரீதியிலோ, இயக்கம் சார்ந்தோ, வியாபார ரீதியிலோ ஆரம்பிக்கப்படவில்லை எனக்-குறிப்பிட்டார்.

அடுத்து பேசிய திரு. அருள் அவர்கள், பல்வேறு சிந்தனைகள் மூலம் வெவ்வேறு கருத்துக்களைக் கொண்டுள்ள எம்மக்களுள் கலை, இலக்கியம், அரசியல், வாழ்-வியல், கருத்தியல் என்பன பற்றி உண்மைக்குப் புறம்பானவையே நிலமாகத் தெரிகின்ற போதிலும், புறநிலையில் இவற்றிற்கு ஒரு உண்மைநிலை காணப்படும். இவ்வுண்மையின் பக்கத்தில், மக்கள் நோக்கும் வகையில் உண்மைகள் சார்ந்த தேடலுக்கு குறைந்த பட்சம் இத் "தேடலை" நகர்த்துவது இதன் அடிப்படை நோக்கம் எனத்தெரிவித்தார்.
மேலும் மனித உழைப்பிலிருந்து தோன்றிய கலை, இலக்கியங்கள் ஆளும்வர்க்கத்துக்கு சாதகமாக சேவை செய்வதற்கு எவ்வாறு மாற்றிப்படைக்கப்பட்-டது என்பதை இனங்காட்டியதுடன், இம் மாபெரும் உழைப்பிலிருந்து தோன்றிய கலைகளை உழைக்கும் வர்க்கத்திற்கு சேவை செய்யச் செய்வது தான் - மனித நேசிப்புள்ள இலக்கியவாதிகள் கடமையெனவும் தெரிவித்தார்.

தொடர்ந்து "தேடல்" சஞ்சிகை விநியோகிக்கப்பட்டு, அதில் கலந்து கொண்டவர்களிடமிருந்து கருத்துத்தெரிவிக்கும்படி, அவ்வமைப்பால் வேண்டப்பட்டது.

பின்னர் திரு. இளங்கோ அவர்கள் கருத்துத் தெரிவிக்கையில்; பிரான்சில் வாழும் தமிழ் மக்களின் யதார்த்த நிலையில் பெரும்பான்மை மக்களின்வர்க்க சிந்தனைகள், பூர்சுவாதத்தன்மை என்பவற்றை விபரித்து, கலை, இலக்கிய, கலாச்சார வடிவங்களினூடு தான், இவர்களை சரியான திசையில் சிந்திக்க வைக்கலாம் எனக்குறிப்பிட்டார்.
மேலும் இவர் தனதுரையில், கலாச்சார முரண்பாடுகளுக்கிடையில் மொழி - புரியாத, சுதந்திரமில்லாத அளவிற்கு மீறிய உடல்உழைப்புக் கொண்டு, நாளை எம்மண்ணில் தனிப்பட்ட ரீதியில் தமக்குக்கிடைக்கும் பொருளாதார மேம்பாட்டு நிலையை மனதில் கொண்டு நவீன அடிமைகளாக வாழுகின்ற எம் மக்களுக்கு சமூகவிஞ்ஞானத்தை கலை, கலாச்சாரவடிவங்களுடு புகுத்தி, அவர்கள் போலி வாழ்க்கையை உணர்த்தி, எம்தேசத்தை நோக்கிய மையத்துக்கு கொண்டுவர இவ்வமைப்பு முயற்சி செய்யும் எனவும் தெரிவித்தார்.

தொடர்ந்து அங்கு சமூகமளித்தவர்களின் வினாக்களிற்கு அமைப்பாளர்களினால் பதில்கள் கூறப்பட்டன.
அங்கு சமூகமளித்தவர்களுள் ஒருவராக திரு. அந்தோனிப்பிள்ளை அவர்கள் -



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilrangam.net

கருத்துத்தெரிவிக்கையில், இன்றைய இக்கலந்துரையாடல் வரலாற்றில் ஒரு முக்கியத்துவம் வாய்ந்த சம்பவமாக இருக்கின்றது எனக் குறிப்பிட்டது மிக-வும் பொருத்தமாகவிருந்தது.
மேலும், இப் பாரீஸ் நகரில் கடந்தகாலங்களில் நடந்த சம்பவங்களால் தமது கருத்தை முன்வைப்பதில் சிக்கல் ஏற்படக்கூடிய அல்லது அதற்கு சந்தர்ப்பம் கிடைக்காத ஒரு சிக்கலான சூழலில், இவ்வமைப்பைத் தோற்றுவித்தது பாராட்டத்தக்கது எனவும், இதன் நோக்கம் எதிர்காலத்தில் எம் நாட்டில் நல்ல தீர்வுகளைக் காண்பதற்கு ஓர் உந்துசக்தியாக அமைதல் வேண்டுமெனவும் அதிலிருந்து இவ்வமைப்பு தடம்புரளக்கூடாது என்றும் - ஆலோசனை தெரிவித்தார்.
மேலும் தனதுரையில், இங்கு அமைப்பாளர்கள் கூறியது போல் எம்மக்களின் உதிரி உழைப்பு மனோபாவம், வர்க்க நிலைப்பாடு இங்கு காணப்படுகின்ற போதும், அவர்களை அப்படியாக மாற்றும் சூழலை மேன்மேலும் அதிகப்-படுத்தும் எம்மவர் செயற்பாடும் இங்குள்ளது எனவும் இவர்களை இனங்காட்ட வேண்டும் என்ற முனைப்பில் அமைப்பு தன் முக்கிய நோக்கத்தைக் கை-விடக்கூடாது எனவும் குறிப்பிட்ட இவர், மிகவும் சிக்கலான சூழலில் நல்ல நோக்குடன் தோன்றிய இவ்வமைப்பு சுயலாபம், சுயநலம் கருதியோ நோக்கத்தைக் கைவிடுமாயின், அது எமக்கு பாரிய இழப்பு மட்டுமல்லாது, இனிமேலும் இத்தகைய அமைப்புக்கள் இங்கு தோற்றம் பெற்று வளர்வதற்குரிய நம்பிக்கையையே வேரறுத்து விடும் எனத் தான் கருதுவதாகக் கூறியது அனைவரையும் ஒருகணம் சிந்திக்க வைத்தது.

அடுத்து திரு. பொன்னுத்துரை அவர்கள் கருத்துத்தெரிவிக்கையில், முற்போக்குத்தேடல் காரணமாக ஒன்றிணைந்த இவ்வமைப்பு பாராட்டப்படக்கூடியது என்றும், மக்களுக்கு கருத்துக்கள் சொல்வதற்காக, பொதுநோக்கில் - ஆரம்பிக்கப்பட்ட அமைப்புக்கள் தம் நோக்கினைச் செயற்படுத்துவதற்காக பல்வேறு கருத்துக்களைக் கொண்டவர்களையும் வற்புறுத்தி தம் அமைப்பு-டன் இணைப்பது, அவர்களின் கருத்து முரண்பாடுகள் களையப்படாதவிடத்து அவர்கட்கு இடையில் மோதல் ஏற்பட்டு ஈற்றில் அவை அற்றுப் போவது போன்ற பல சம்பவங்களை தனது அனுபவத்தில் கண்டதாக குறிப்பிட்ட இவர் கலை, இலக்கியத் தேடல் பற்றிய பொதுவான நோக்குக்கு தன் ஒத்துழைப்புக் கிடைக்கும் எனக் கூறினார்.

தொடர்ந்து ஈழத்து முற்போக்கு எழுத்தாளர் திரு. அகஸ்தியர் கருத்துத் தெரிவிக்கையில், மனித குல இலட்சியங்களை அடைவதற்கு கலை, இலக்கியமும், அரசியலுமே சிறந்த சாதனங்கள், இவைகளாலேயே சமுதாயத்தை மாற்றமடையச் செய்யமுடியும். மனிதனை மனிதன் நேசிப்பது தான் மானுட தர்மம். இந்த அடிப்படையிலேயே இவை இருக்க முடியும் எனக் குறிப்பிட்ட இவர், தொழிலாளர் வர்க்கம் ஒரு போராட்டத்தை முன்னெடுக்க வேண்-டும் என்றால் அந்தந்த தளத்தின் யதார்த்த நிலையில் நின்றே போராட்டத்தை முன்னெடுக்க வேண்டும். கற்பனாவாதங்களினூடு கற்பனையில் போராட்டம் நிகழ்த்த முடியாது எனவும், இனரீதியான போராட்டங்கள் கூட தொழிலாளர்வர்க்கத்தின் இணைப்பினூடு நிகழ்த்தப்பட்டால்தான் வெற்றி பெறும் என்றும், ஒரு இலக்கியவாதிக்கு செழுமை, சத்திய வெளிப்பாடு, நேர்மை கட்டாயமாக

www.tamilrangam.net

காணப்பட வேண்டும். அதேவேளை அரசியல், இலக்கியத்தில் ஈடுபடுகின்றவர்களுக்கு அறிவும், நிதானமும் தேவை எனவும் கூறினார்.

அடுத்து பேசிய திரு. அரியநாயகம் அவர்கள் கருத்துத் தெரிவிக்கையில்; இவ் அமைப்பு தம் முற்போக்கு கருத்துக்களை முன் வைப்பது மாத்திரம் அல்ல, அவற்றைச் செயல்படுத்தவும் வேண்டும் எனத் தெரிவித்தார்.

அங்குவந்திருந்த நான்காம் அகிலத்தின் புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்தின் சார்பில் கருத்துக்கள் தெரிவிக்கப்பட்ட போது, இக் கலை இலக்கியங்கள் மாவோசியத்துக்குள்ளும், குட்டி முதலாளித்துவ இயக்கங்களுக்குள்ளும் மீண்டும் போம் முறை தவறிப்பிறந்து விடும் எனக் குறிப்பிடப்பட்டது பெரும் விவாதத்திற்குட்படுத்தப்பட்டு அமைப்பினரால் அக்கறித்து தகர்க்கப்பட்டது.

அங்கு சமூகமளித்தவர்களின் சந்தேகங்களுக்கு அமைப்பாளர்களினால் பதிலளிக்கும் பொழுது "மனித குலத்தின் அனைத்து தளைகளையும் களைவதற்கு ஒடுக்கப்படும் மக்களின் சார்பாக இவ்வமைப்பு குரல் கொடுக்கும்" எனவும் விமர்சனம், சுயவிமர்சனம் செய்யாதவர்கள் தான் அராஜகத்தை துணைக்கு அழைக்க வேண்டிவரும் என்பதைக் குறிப்பிட்டு மாறுபட்ட அபிப்பிராயங்கள் கூட தம்மால் பரிசீலிக்கப்பட்டு "தேடல்" வாயிலாக விமர்சிக்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டது.

கலை, இலக்கிய ஊடகத்தினூடு சமகாலப்பிரச்சனைகளின் சரியான விமர்சனங்கள் வாயிலாக கருத்துப் புரட்சிக்கு வித்திடும் இவ்வமைப்பானது, சரியான பாதையைத் தெரிந்து கொள்ள முடியாத, கடந்த கால அரசியல் நடவடிக்கைகளால் விரக்தியுற்றிருக்கும் எம் மக்களுக்கு; அவர்கள் விடிவுக்கான சரியான வரையறுத்த அரசியல் பாதையை தெளிவுபடுத்தி செப்பனிட வேண்டும் என்பதை, தனது வரலாற்றுக் கடமையாகக் கொண்டு செயற்படுமா? என்பதை இனிவருங்காலங்கள் தான் உணர்த்த வேண்டும்....

சென்ற இதழ் தொடர்ச்சியான

## மு. தளையசிங்கமும் மாக்ஸியமும்

— சி. சிவசேகரம்

அடுத்த இதழில் தொடரும்.

www.tamilrangam.net

# வாழ்வு

இன்றைய எம் வாழ்வு
யாரோ அந்நியனின்
விரல்களிடையில்...
தினமும் நடுநிசியில் வைத்த
அலாரம் கணீரென அழைக்க
விசுக்கென எழுந்து
அரைகுறையாக கழித்த கடன்களுடன்
அவரவர் வயிற்றுக்கு அசைவழைக்க
விரைந்தோடி...
குருட்டு விசுவாசத்துடன்
குருதியை ஊற்றி
நவீன அடிமைகளாக
நாட்களை அடுக்குகின்றோம்,
அதியுயர்ந்த மாளிகையின்
உயர்ந்தவர்களாக
அருகிலுள்ளவர்களுக்காக
திமிருடன் மீசையடக்கி—
கூரையை விழித்தபடி
மனசு கிடந்து அடித்துக்கொள்ள
இங்கு
அடுக்கிவிட்ட சிலிப்பர் கட்டைகளாட்டம்
நாமும் —
இரு இரும்பு பாதையாட்டம்
கனவுகளும் —
உணர்வுமாகப்போக
கண்ணயர்வது போல ஒரு நடிப்பு —

www.tamilrangam.net

முகம் மறந்து போய்விட்ட
என் காதலியை
ஆசையில் பார்ப்பது போல்
அடிக்கடி
வானத்தைப்பார்த்துக்கொள்வதும் -
சில சமயம் இட்ட உடைசல்கள்
வெளிர்நிறைந்த மலகூடத்திருந்
பறந்து வந்த கடதாசிகள் சிலவற்றுடன்
இரை மீட்பதும் -
காத்திருக்கும் பொழுதுகளில்
உதிரும் நாட்களுடன்
கனவுகளும் உதிர்ந்துபோக
மனதும் வீக்கமடைந்து ---
ஆயுள் தண்டனையிலும் கொடியதாயிற்று
எம் வாழ்வு.

— இரவி —



www.tamilrangam.net

# பர்மா ஒரு பார்வை

— பிரபா —

தற்பொழுது உலகச்செய்தியில் முக்கிய இடத்தைப் பெற்றுவரும் பர்மிய ஜனநாயகக் குடியரசானது, 678,000கி.மீ பரப்பளவைக் கொண்டதுடன் 38மில்லியன் மக்களையும் உடையது. ஆறுகளாலும், மலைகளாலும் சூழப்பட்ட இயற்கை எழில் கொண்ட இந்நாடு சீனா, லாவோஸ், மேற்கத்திய பாணியிலுள்ள தாய்லாந்து மற்றும் இந்தியாவை எல்லைகளாகக் கொண்டது.

உலகிலேயே அதிகமான அரிசி ஏற்றுமதி செய்த நாடுகளில் ஒன்று. அத்துடன் எண்ணெய், கனிப்பொருள்கள் வளம் நிறைந்த நாடுமாகும். 1948 இல தை மாதம் 04 திகதி பிரிட்டனிடமிருந்து சுதந்திரம் பெற்றுக்கொண்டது. மக்களால் ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்ட யூனு 1962 இல்நடைபெற்ற இராணுவ ஆட்சிக் கவிழ்ப்பின் மூலம் பதவியிழந்தார். இச்சதிக்கு தலைமை தாங்கிய நேவின், நாட்டின் தலைவராகத் தன்னை பிரகடனப்படுத்திக் கொண்டார். நாட்டை சோசலிசப்பாதையில் இட்டுச்செல்வதாகக்கூறி எல்லாவற்றையும் அரசுடமையாக்கினர்.

இவரின் சர்வாதிகார ஆட்சியில் எல்லாக்கட்சிகளும் தடைசெய்யப்பட்டன. தேசிய உற்பத்தி வெகுவாகக் குறைந்தது. அரிசி கூட இறக்குமதி செய்ய வேண்டிய நிலைக்கு நாடு தள்ளப்பட்டது. பசியும், பஞ்சமும் தலைவிரித்தாடத் தொடங்கியது. நேவினின் சர்வாதிகார ஆட்சியில் பத்தொன்பது தடவைகள் அரசுக்கெதிரான கலவரங்கள் நடந்தன. அவை மிகவும் கொடூரமாக அடக்கியொடுக்கப்பட்டன. 1974 இல் நடந்த மாணவர்போராட்டங்கள் கூட ஜெனரல் சென்லு வினல் மிருகத்தனமாக அடக்கப்பட்டன. பின் கடந்தபங்குனி —ஆனி மாதங்களில் பல்கலைக்கழக மாணவர்களின் போராட்டத்தின்போதும் ஏறக்குறைய இருநூறு பேர் வரையில் கொல்லப்பட்டனர். அதிலிருந்து மக்கள் தமது எதிர்ப்பை இன்னும் பகிரங்கமாக காட்டத் தொடங்கினர். இதற்கு முன் தமது ஆட்சியாளரின் பெயரைச் சொல்லக்கூட பயந்தனர். இந்த மாணவர் போராட்டங்கள் அதன் அயல்நாடுகளான பிலிப்பைன்ஸ், தென்கொரிய மாணவர் போராட்டங்களினால் உந்தப்பட்டிருக்கலாமெனவும்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilrangam.net

சொல்லப்படுகிறது. 77வயது உடைய நேவின் மக்களின் எதிர்ப்புகளாலும், தேசிய வருமான வீழ்ச்சியாலும்; நாடு கடனில் தத்தளித்தாலும் தனது - 26 வருட சர்வாதிகார ஆட்சிக்கு தானே முற்றுப்புள்ளி வைக்கவேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டார். பொன்விளையும் நாட்டை சூறையாடிய பெருமை - நேவினையும், அவர் கூட்டத்தையுமே சாரும்.

இதன்பின் நேவினுடைய கையாளான இராணுவத்தளபதி செயின் லுவின் ஜனாதிபதியாகத் தன்னை பிரகடனப்படுத்திக் கொண்டார். பர்மாவின் "கொலை-காரன்" என அழைக்கப்படும் இவரை மக்கள் வெறுத்தனர். இவர் பதவிக்கு வந்தவுடன் முக்கிய எதிரணித் தலைவர்களை சிறையிலடைத்தார். இதனால் இன்னும் ஆத்திரமடைந்த மக்கள் எழுச்சியொன்று பர்மாவை உலுப்பியது. மாணவர்கள், அரசஊழியர்கள், புத்தகுருமார் எல்லோரும் எழுச்சியில்பங்கு பற்றி அரச இயந்திரத்தை முற்றுமுழுதாக இயங்காமல் பண்ணினர். ஊர்வல-த்தின் போது சில இராணுவத்தினரும், பொலிசும் கூட மக்களுடன் சேர்ந்து "மக்கள் பொலிஸ் மக்களுக்கே" என்ற கோசத்துடன் பங்கு பற்றினர். அரச இராணுவம், இதில் பங்குபற்றிய மக்களை மூர்க்கத்தனமாக கொன்று குவித்தது. கொதிப்படைந்த மக்கள் பல இடங்களில் இராணுவத்தை சுற்றி வளைத்து, எதிர்த்து போரிட்டனர். மக்களின் ஆவேசஎழுச்சியினால் அரச ஆதரவாளர்களதும், இராணுவத்தினரதும் தலைகள் துண்டாடப்பட்டு மரங்-களில் தொங்கவிடப்பட்டிருந்தன. ஆர்ப்பாட்டங்களின் போது மக்கள்; சைக்கிள் செயின், இராணுவத்தினரிடமிருந்து அபகரித்த ஆயுதங்களாலுமே தாக்கினர். எழுச்சியை எதிர்கொள்ளமுடியாத செயின் லுவின் பொறுப்பேற்ற 17 நாட்களில் தனது இராஜினாமாவை அறிவித்தார்.

இதைத் தொடர்ந்து முதன்முதலாக சிவில் அதிகாரி, நேவினின் அரசாங்கத்தில் நீதிஅமைச்சராக இருந்த விலக்கிய மோங்மோர் என்பவர் ஜனாதிபதியாக பதவியேற்றார். ஒரு கட்சி ஆட்சியை மாற்றி, பலகட்சி அரசாங்கம் அமைக்கவும், ஜனநாயகம் நிலவவும் வழிவகுக்க தன்னால்முடிந்தவற்றை செய்யப் போவதாகவும் அறிவித்தார். ஆனால் அதற்கான ,பொதுவாக்கெடுப்பு எதுவுமே இன்று வரையில் நடத்தப்படவில்லை.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilrangam.net

எதிர்அணியைப் பார்ப்போமானல், புத்தபிக்குகளின் அமைப்பைத்தவிர சட்டரீதியான வேறெந்த அமைப்பும் இயங்கவில்லை. எதிர்க்கட்சியில் யார் தலைமை தாங்குவது என்ற போட்டியே நிகழ்கின்றது. பல தலைவர்கள் வெளிநாட்டில் உள்ளார்கள். முன்னைநாள் ஐ. நா. பொதுசெயலாளர் ஊதாண்டின் மருமகன், தற்பொழுது பாங்கொக்கில் இருக்கும் தின் மியிண்யு, 70 வயதுடைய முன்னாள் இராணுவத்தளபதி ஓங்கி, மாணவர்களும், புத்தபிக்குகளும் இவரின் பழைய இராணுவத்தொடர்புகளையும், நேவினுடனை தொடர்புகளையும் அம்பலப்படுத்தி உள்ளனர். அடுத்து ஓங் சான்சும்கீ. இவர் ஓர் முன்னாள் விடுதலை வீரரின் மகள் "விடுதலைத்தந்தை " என அன்புடன் அழைக்கப்பட்ட இவரின் தந்தை சுதந்திரம் கிடைப்பதற்கு ஒரு வருடத்திற்கு முன்கொல்லப்பட்டார். இந்தப் பெண்மணி, கடந்த மாசி மாதம்தான் பர்மாவிற்கு வந்தவர். அதற்கு முன் இங்கிலாந்தில் வாசம். ஒரு ஆங்கிலேயரை துணைவராகக் கொண்டவர். அரசியலுக்கும் இவருக்கும் வெகுதூரம் எனப்பேசப்படுகின்றது . ஆனல் தந்தையாரின் புகழை வைத்து ஆதரவு தேடுகின்ருர். பெனசிர் பூட்டோ, அக்கியூனே வரிசையில் இடம் பிடிக்கமுடியுமா ?

பர்மிய அரசிற்கு உதவி வந்த அமெரிக்கா, ஜப்பானும் தங்கள் உதவிகளை நிறுத்திக் கொண்டன. அத்துடன் திறந்த பொருளாதாரம், ஜனநாயக ஆட்சி மூலம் தான் நாட்டை முன்னேற்றலாம் எனவும் அதற்கான உதவிகளை செய்யத்தயார் எனவும் வாஷிங்டன் அறிவித்துள்ளது. பர்மாவை இன்னெரு தாய்லாந்தாக்க அமெரிக்க நிர்வாகம் முயல்கின்றது. அத்துடன் தென்கிழக்காசியாவில் தனது காலை மீண்டும் பதிக்கப்பார்க்கின்றது. ஆனல் அயல்நாடுகளாக இந்தியாவும், சீனவும் உள்ளதால் பர்மா அணிசேராக்கொள்கையைத் தான் கடைப்பிடிக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

பல்கலைக்கழக மாணவர்களின் புரட்சிகர அணிகளுடனை தொடர்பே , இந்த எழுச்சிகளுக்கு காரணம் என நம்பப்படுகின்றது. இங்கு பதின்நான்கு மாநில அரசுகள் உள்ளன. அவற்றில் தாய்லாந்து, சீன, லாவோஸ் எல்லையோரமாக உள்ள மாநிலங்களில் புரட்சிகர அணிகள் தலைமறைவாக இயங்குகின்றன. கரன், சான், கசின் மாநிலங்களில் உள்ள அமைப்புக்கள் இதில் முக்கியமானவை. மற்றைய மாவட்டங்களில் உள்ள எல்லா புரட்சிகர அணிகளும் சேர்ந்து



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilrangam.net

தேசிய ஜனநாயக முன்னணியைத் தோற்றுவித்துள்ளன. இந்தப் புரட்சிகரஅணியில் மாணவ, மாணவிகள் உட்பட பலருக்கு அரசியல் இராணுவ வகுப்புக்கள் நடாத்தப்படுகின்றன. அத்துடன் இவர்களுக்கு நல்ல தளமும் உள்ளது. கொரில்லாப்போருக்கு ஏற்றவாறு பிரதேசம் அமைந்துள்ளது . மலைகளும், காடுகளும், ஆறுகளும் உள்ளதால் தலைமறைவாக இயங்க நல்ல சூழ்நிலை. ரங்கூனிலும் பல மாணவர் அமைப்புக்கள் தலைமறைவாகவே இயங்குகின்றன.

புரட்சிகர அணியினர், பர்மிய கம்யூனிஸ்ட் கட்சியுடன் இணைந்து செயற்படுகின்றனர். கடந்த பல வருடங்களாக அரசுடன் பல மோதல்கள் நடந்தும் உள்ளன. கரன் என்னும் மாநிலத்தில் பல இடங்களை தேசிய ஜனநாயக - முன்னணி தனது கட்டுப்பாட்டில் வைத்துள்ளது.

இந்த புரட்சிகர அணிகளுக்கும் மக்களுக்குமான தொடர்புகள், நடவடிக்கைகளை வைத்தே எந்த அளவிற்கு; இது மக்களுள் ஒன்றுகியுள்ளது என்பதைக் காணமுடியும். பர்மாவில் இராணுவ சர்வாதிகாரம் ஒழிந்து "மக்கள் - ஜனநாயகம்" மலர்வது எப்போ...?

# 坚决支持非洲人民反对殖民主义和种族歧视的斗争

Resolutely Support the Struggle of the African People Against Colonialism and Racial Discrimination
Soutenons résolument les peuples d'Afrique dans leur lutte contre le colonialisme et la discrimination raciale!






என்னிடம் அவர்கள் சிறுகதையொன்று கேட்டார்கள். அதுவும் கடைசி நேரத்தில், ரெலிபோனில். வேண்டுதல் என்னைச் சிறுது "டிஸ்ரேப்" பண்ணியது. சரி, முயற்சிசெய்கின்றேன் என்று மட்டும் சொல்லிவைத்தேன்.

சிறுகதை ஒன்று எழுதவேண்டும். அவசரஅவசரமாகவேணு. திடுதிப்பென எழுதினாலும் அதில் ss தரம் காரம். . . . . . என்று ஜோசித்து விட்டு பேனாவை ஜாக்கட்டுக்கள் · தேடினேன் பேனாவும் இல்லை, பென்சிலும் இல்லை. தாள்கள் நிறைய இருந்தன. சுவர் இருக்குது, கிரியில்லையே. எக்குப்பைத்தியம் பிடித்துவிடும்போல இருந்தது. ஆத்திரம் அனலாய்க் கொதிக்க மெத்ரோவைவிட்டு வெளியே வந்தேன்.
**ஸ்திராஸ்பேக்.** எனது கையறு நிலையை எள்ளிக் கலங்கியவாறு இயந்திரம் போல பார், ஒன்றுக்குள் உள்ளிட்டேன்

"அன் டெமி!! (ஒரு பயர்)

ஒரு சிகரட்டை எடுத்துப் பற்றியவண்ணம், நாடியிலே கையை ஊன்றிச் யோசித்து நின்றவே ளையில் "அடைச்சி" என்னைப் பார்த்துச்சிரித்தாள். அழகிதான். அவளது பளீரென்ற பவுண்பல்கள் எனது மென்மையான உணர்வுகளின் மீது சுத்தியல் கொண்டு ஓங்கி அடிக்க, மடக்கெனடெமியை விழுங்கி முடித்தேன்.

வலையை வீசி என்னை எப்படியாவது பிடிக்கவேண்டும்என்ற லாப ஆசையுடன், என் முன்வந்தாள் அடைச்சி.

"து வியான்" (நீ வாழியா)

"நோ"

வெளியே வந்தேன். சிறுகதையைப்பற்றி மட்டுமே என்னால் அப்போது சிந்திக்க முடிந்தது.

* * * * * *

பேனைக்களுக்கும், தாள்களுக்கும் வீட்டிலே, இல்லைஅறையிலே குறைச்சல் இல்லை. அறைக்குப்போய்விட்டேன் என்றால் கதை முடிந்துவிடும். எனது குதிகளுக்கு நம்பிக்கை ஒரு வேகத்தைக் கொடுத்தது. அறைக்கு வந்தபோது, அங்கே "சனங்கள்" ஜே. அன்ட். பிக்கு முன்னல் பக்தியுடன் கவிதை பாடியவண்ணம் இருந்தன. வீடியோ வழமைபோல தனது பாட்டில் ஓடிக்கொண்டிருந்தது. மிதங்கும் விழிகளால் சிரித்தவாறு அவர்கள் என்னை வரவேற்றனர்.

"என்ன இன்டைக்கு ஏழியா வந்திட்டீர்!" இப்படிக் கேட்டவாறு விஜ்கியை ஒரு கிளாசில் எனக்கு முன் வைத்தான் ரமேஸ்.

அவர்களது வரவேற்பும் உபசாரமும் எனக்குள் தர்மசங்கடத்தை ஊட்டியன.

"தம்பி ரமேஷ், எனக்கு உதொண்டும் வேணும், எனக்குக் கொஞ்சம் எழுத்துவேலை இருக்கு, உந்த வீடியோவை மட்டும் ஒருக்கா நிப்பாட்டிவிட்டால் பெரும் புண்ணியமா இருக்கும்!" ஒருவாறு சொல்லவேண்டியதைச் சொல்லி முடித்தேன்.

www.tamilrangam.net

ரமேஷின் அரும்புமீசை துடித்தது. சுற்றவர இருந்தோர் என்னை ஏளனமாகப் பார்த்தார்கள்.

"முதலிலை ஒரு "பெக்" எடுங்கோ. எடுத்தியளெண்டா எழுந்து தன்ரை பாட்டிலை வரும். நீங்களெல்லாம் எழுதி என்னத் தைத்தான் கிழிக்கப்போறியளோ!"

"எடுங்கோ! எடுங்கோ!" ஏனையோரும் ரமேஷுடன் சேர்ந்து என்னை ஊக்குவித்தார்கள். நானும் அப்பாவிபோல ஒரு "பெக்"கை வயிற்றுக்குள் ஊற்றினேன். சில கணங்களில் நானும் அவர்களில் ஒருவராகி, "சிப்ஸை" எடுத்துக் கடித் தேன்.

ரமேஷுக்கு அருகிலேயிருந்த சுந்தரத்தின் முகம் சோர்ந்து போயிருந்தது. வழமையில் "ஜோக்"குகள் அடித்துக்கொண் டிருக்கும் அவனது முகத்தைப்பார்க்கப் பரிதாபமாக இருந்தது.

"என்ன சுந்தரம், உஷாரைக் காணேல்லை. கப்பலேதும் கவிண்டு போட்டுதோ!" - கேட்டேன்.

விஸ்கியினுல் நாக்கை நனைத்துவிட்டு, "எனக்குச் சோத்தி விசா[1] அடிச்சுப்போட்டாங்கள்!" என்றான்.

உவன் ஒரு விசரன்!"- ரமேஷ் கத்தினன், "சோத்திவி சாவைக் கண்டு கிலிச்சுப்போயிருக்கிறன். இன்னொரு பப்பி போட்டாலேன் கிளியர் எண்டு நான் சொன்னதை உவன் இன்னும் சீரியஸா எடுக்கவில்லை. உவன் ஒரு பயந்தாங் கொள்ளி!" விமர்சனம் காரமாய்த்தான் இருந்தது.

பிதுங்கும் விழிகளோடு என்னைப் பார்த்தான் சுந்தரம். மீண்டும் ஒரு "பெக்"கை அடித்துவிட்டு, "சுந்தரம், ரமேஷ் சொல்லிறது சரிதான். இன்னொரு பப்பிபோட்டா விஷயம் தானே முடிஞ்சிடும்!"

எனக்கோ பசி. அது என் வயிற்றைக் கடித்தது. விழிகள் குசினியை எட்டிப்பார்த்தன. புதிதாக வந்த "சனங்கள்" இயந்திரகதியில் சமையல்கலையில் தங்கள் கைவண் ணத்தைக் காட்டிக்கொண்டிருந்தன.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilrangam.net

அந்த அறையின் சுவாத்தியத்துக்குள் இப்படித்தான் எனது ஆழ் மன ஆசைகள் அடிக்கடி கரைந்துபோவதுண்டு. அவர்களைக் கடுமையாக விமர்சிப்பது புத்திசாலித்தனமானதல்ல என்றுநான் நினைத்துக் கொள்வதுண்டு.

அவர்களுடன் திருவிழாவைக்கொண்டாடிவிட்டு, ஒருவரையொருவர் நெருக்கியடித்துக்கொண்டு தூங்கவெளிக்கிட்டபோது தான் எனது சிறுகதையின் ஞாபகம்வந்தது. பிரக்ஞையை ஒரு நிலைக்குக்கொண்டுவர முயன்றேன். போதைக்கும், எனது பிரக்ஞைக்குமிடையே போராட்டம் நடந்தது. போதை வலையிலே சிக்கிக் கிடந்த பிரக்ஞை கருவைத் தேடவெளிக்கிட்டது.

கரு.

கருவைத் தேடும் வேட்டை.

வலையினுள் பிரக்ஞை. வலையினுள் கருவுக்கான ஒரு போராட்டமும் வேட்டையும்.

வேட்டையென்றதும், எனக்கு வேட்டையாடியவர்களின் ஞாபகம் வந்தது.

வேட்டையாடியவர்கள். அதுவும் காட்டுக்குள் மட்டும்தான் வேட்டையாடியவர்கள், மிருகங்களை மட்டும்தான்.

நவீனத்துக்கு அந்நியப்பட்டுநிற்கும் துவக்குகளைக்கொண்டு மான்களையும், மரைகளையும் சுட்டுக்கொன்ற, சுட்டுச் சுவைத்த இளமை வீரிப்புக்கொண்ட முதியவர்கள். எனது மூதாதைகள். வாழ்வுக்காகக் காட்டுக்குள்வாழ்ந்தவர்கள், போராடியவர்கள். இவர்களை நினைத்தேன். நிலவின் ஒளியில், குளிர்மையில், முற்றத்திலே கூடியிருந்து — அவர்களின் மரையையும் மானையும் சுவைபார்த்த இரவுகள் நினைவினைக் கிள்ளின.

விடிந்தபோதுதான் — மானையும், மரையையும் போதை பறித்துச்சென்ற கொடுமையை ரசித்துக் கொண்டேன்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilrangam.net

காட்டுக்குள் போர் நடத்திய எனது மூதாதையர் களைப்பற்றி இலக்கியமல்ல "காவியம்" படைக்க வேண்டும் – ரொய்லெட்டுக்குள் காலைக்கடன் கழிக்கும் போது சபதம் எடுத்துக்கொண்டேன். வெளியேவந்து தூங்கிவண்ணம் கிடக்கும் சனங்களின் முகங்களைப் பார்த்தேன். எழுதவேண்டும், இப்போதேஎழுத வேண்டும், எனக்குள் ஒரு உந்தல். வியட்நாமிக்கு அடித்துக் கொடுக்க கிளம்புமுன் "காவியத்தை" முடித்துவிடுவது என்று எழுத வெளிக்கிட்டேன். எழுத்து வந்தது. எழுதினேன். இரண்டுபக்கம் எழுவிட்டு கடிகாரத்தைப் பார்த்தேன். பட்டென எனது "மூட்" உடைந்து போனது. வியட்நாமிக்கு அடித்துக் கொடுக்கவேண்டிய நேரத்தின் எல்லையை சின்னமுள் நெருங்கிக் கொண்டிருந்தது. படக்கென, ஒரு "காக்கா றூல்" எடுத்துவிட்டு மெத்ரோவை நோக்கி ஓடினேன். தாள்களையும், பேனையையும் எனது பிரக்ஞை மறந்துபோகவில்லை.

மெத்ரோவுக்குள் இடம் இருந்தது. அட்டணைக்கால் போட்டு வசதியாகக் குந்தியவண்ணம் நான் எழுத வெளிக்கிட்டேன். எழுத்துவந்தது. கரு தன்மீது சதைகளைச் சேர்க்க வெளிக்கிட்டது.

வீரமணி அப்புவுக்கு காடுதான் வீடு. காட்டுக்குள் ஒரு வீடுகட்டி தனிக்கட்டையாய் வீரவாழ்க்கை நடத்திக்கொண்டிருந்தார். எங்களது வீட்டிற்கு விஜயம் செய்யும் ஒவ்வொரு தடவையும்மான், மரை இறைச்சிகளையும் – தனது வீராவேச அநுபவங்களையும் காவிக் கொண்டுவருவார். அப்புசொல்லும் கதைகளைவிடிய விடியக் கேட்டுக் கொண்டிருக்கலாம். அவரதுவைரம் பாரித்த புஜங்களை நாங்கள் ஆச்சரியத்துடன் தொட்டு விளையாடுவோம். அவரது விழிகள் நிலவின் ஒளியில் மிளிரும்.

www.tamilrangam.net

அப்பு ஒரு நாள் பாம்புகளைப்
பற்றிப் பேசவெளிகிட்டார்.
அவரது தாழிப்பு எங்களது
உடலில் மயிர்களை துள்ளிப்பாய
பாயவைத்தன. நாங்கள் ரசனை
யுடன் நடுங்கிக்கொண்டிருந்
தோம். எனது தங்கைபயத்துடன்
என்னை இறுகப் பிடித்துக்கொண்
டாள்.

"திடீரென்று அப்பு இருமவெளிக்
கிட்டார். விடாமல்இருமினார். . "

மணி அடித்துக்கொண்டிருந்த வேளையில்தான் மூடப்பட்ட கதை பலவந்தமாக இழுத்து வெளியே பாய்ந்தேன். இப்படி எத்தனை தடவைகள்!

வியட்நாமியின் கடைக்குள் நுழைந்தபோது நேரம் நன்றாகப் பிந்திவிட்டது. காசுப்பட்டடையில் குள்ளமான சிரிப்போடு நின்ற பத்ரேன்[3], என்னைக் கண்டதும் இரண்டு பெரிய கிடாரங்களைச் சுட்டிக்காட்டி,

"முதலிலே, உதைக் கழுவிக்கொண்டு வாரும்!" என்றார்

கிடாரங்களைக் கழுவிக்கொண்டிருந்தபோது, மெத்ரோவிற்குள் எழுதிக்கொண்ட "காவியத்தின்" பக்கங்களை மனம் ரசனையுடன் அசை போட்டது. றெஸ்ரோரன்ரை விட்டு எப்போது மீட்சி பெறுவது. என்னுள் இனம் புரியாத தவிப்பு. கிடாரங்களுக்குப்பின் கோப்பைகள் மலைபோல வந்து குவிந்தன. கைகள் இயந்திரகதியில் கோப்பைகளைக் கழுவ, சிறுகதையின் விட்டுப்போன பகுதியை மனதுள் தொடர்ந்தேன்.

"வீரமணி அப்புவுக்குக், காட்டுக்
குள் வைப்பாட்டிகள் இருக்கின்
றார்கள் என்ற விஷயம்என்காதில்
விழுந்ததுண்டு நான் அப்போது
சிறுவனாயிருந்தாலும், இந்த
வயதிலுமா என்று என்னையே

கேட்டுக்கொண்டேன்.

www.tamilrangam.net

# தேடல் 1 விமர்சனம்

சத்தியன்

மக்கள் கலை இலக்கிய அமைப்பினரின் சஞ்சிகையான தேடலில் நானும் பங்கு கொண்டதில் பெருமகிழ்ச்சி அடைவதோடு, அச்சஞ்சிகையின் படைப்புக்களின் தன்மையை என் பார்வையில் விமர்சிக்க விழைகின்றேன்.

விமர்சனம் படைப்பாளிகளின் நண்பன் என்ற வகையிலும் விமர்சனம் மேலும் தேடுதலை தீவிரப்படுத்தும் என்ற முறையிலும் என் விமர்சனத்தை உங்கள் முன் வைக்கின்றேன்.

தேடல் சஞ்சிகை முதல் இதழில் இச்சஞ்சிகை வெளியிடுவதற்கான காரணம், கவிதைகள், சிறுகதை, உருவகம், கலை, அரசியல் கட்டுரைகள் ஆகியன உள்ளடங்கியுள்ளது.
தேடல் இதழ் வெளியிடுவதற்கான காரணத்தை முகற்பக்கத்தில் வரையறுத்து தெளிவாக சொல்லியுள்ளார்கள். எமது ஆரம்பகால கலைவடிவங்களான தாலாட்டு, ஒப்பாரி, நாட்டுக்கூத்து, நடனம் போன்றவற்றை கூறியுள்ளார்களே தவிர, சமூகவளர்ச்சியோடு மாறுபட்ட நாடகம், பரதநாட்டியம், கருநாடக இசை, வாத்திய இசைகள் (புல்லாங்குழல், நாதஸ்வரம், தவில்) தொழில்நுட்பத் துறையோடு சேர்ந்த சினிமா போன்றவற்றைப் பற்றி எவ்வித குறிப்பும் இல்லாதது இங்கு குறிப்பிட்டாக வேண்டும்.
கலைவாணி எழுதிய "நானும் ஒரு பெண்" என்ற பெண்ணின் மனஓட்ட உருவகம் மன்வாசனையுடன் சொல்லப்பட்டிருக்கின்றது.
அர்ச்சுனி எழுதிய "மனநோய்" என்ற சிறுகதை மேற்குலக இயந்திரவாழ்க்கையில் சிக்கித்தவித்தாலும், தங்களது இயல்பான குணம்சத்தை உடைய நடுத்தர வர்க்க பெண்ணின் மனவுணர்வும், அவளுடைய அந்த மனவுணர்வுக்கு காரணத்தை புரிந்து கொள்ளாத சராசரி ஆணையும் அக்கதையில் கண்டோம்.
அச்சிறுகதையின் கருவும், அது நடக்கும் தளமும் சொல்லப்பட்டது போன்று அக்கதைக்கான தீர்வு அமையவில்லை. ஒரு படைப்பாளி பிரச்சனையை சொல்வதோடு மட்டும் நின்றுவிடாமல், அப்பிரச்சனைக்குரிய காரணத்தையும், அதற்கான தீர்வையும் சொல்வது ஒரு நல்ல சிறுகதைக்குரிய இலக்கணம் ஆகும்.

சுகன் எழுதிய "காணிக்கை" என்னும் கவிதை அறிவுபூர்வமானதோடு வாசகனை சிந்திக்க வைத்தாலும் கூடவே விரக்தியும் தொனிக்கின்றது. ஆனால் அக்கவிதையின் தேடலில் எத்தனை வாசகர்கள் பங்கு கொள்ளமுடியுமென்று திட்டவட்டமாக சொல்லமுடியாது. ஏனெனில் அக்கவிதையில் கடினமான, சாதாரண வாசகனும் புரிந்து கொள்ளமுடியாத சொற்கள் இடம்பெறுகின்றன.
ஆனால் அருந்ததி எழுதிய கவிதையில் எளிய நடையில், இலகுவான தமிழில்எடுத்து கொள்ளப்பட்ட உள்ளீடு சொல்லப்பட்டுள்ளது.
ஜனகிர்தன் எழுதிய மொழி-உருவம்-உள்ளீடு என்ற கட்டுரை உண்மையிலே ஐரோப்பிய எழுத்தாளர்களின் குறைநிறைகளை மட்டுமல்ல, எல்லா எழுத்தாளருக்குமான குறைநிறைகளை கூறியுள்ளது. ஒரு எழுத்தாளன் ஒரு மொழியைக்-



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilrangam.net

கையாளும் போது, அம்மொழி பேசப்படும் பிரதேசத்தில் மண்வாசனையைக் கொண்டு இருக்க வேண்டும் என்பதும் இன்றைய இலக்கிய கர்த்தாக்களின் கருத்தாகவுள்ளது. ஆனல் அம்மண்வாசனை நிறைந்த சொற்கள் அம்மண்ணின் மைந்தர்களைத் தவிர மற்றவர்கள் புரிந்து கொள்வார்களா என்பது சந்தேகமே. இப்படியான நிலையில், ஒரு மொழியைக் கையாளுவது எப்படி என்பது இலக்கிய சர்ச்சைக்குரிய கேள்வி.

மொத்தத்தில் இத்தேடலில் எமது நாட்டுச் செய்திகள் இல்லாதது நம்நாட்டு மக்களுக்கு, இச்சஞ்சிகை எவ்வகையில் வழிகாட்டப் போகின்றது என்பதெல்லாம் சர்ச்சையான கேள்வியாகும்.






தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilrangam.net

# படைப்பாளிகளுக்கு!

எமது தேடலில் நீங்களும் பங்கு கொள்ளுங்கள், தரமான ஆக்கங்கங்கள்; விமர்சனங்கள் என்பன உங்களிடமிருந்து எதிர்பார்க்கப்படுகின்றன.

தொடர்புகட்கு

(ORGANISATION PEUPLE D'ART ET DE LITTERATURE)

K. KANAGASINGAM,
39, RUE DE LA JONQUIERE,
75017, PARIS.